
# கும்பாபிஷேக சிறப்பு மலர்

**29 . 10 . 1999**



ஞான விநாயகர் ஆலயம்,
அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக சிறப்பு மலர்

**29 . 10 . 1999**

இதழாசிரியர்

## இ. நாகலிங்கம்

வெளியீடு

அரசினர் ஆசிரியர் கலாசாலை,

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | ஆசியுரைகள் | I |
| 02. | இதழாசிரியரிடமிருந்து........ | XVI |
| 03. | ஞான விநாயகர் அருள் | XVII |
| 04. | பிள்ளையார் சுழி (திரு. M. செந்தில்நாதன்) | 01 |
| 05. | பிள்ளையார் வழிபாடு (திரு. A. செல்லத்துரை சிவதொண்டன் நிலையம்) | 02 |
| 06. | ஆலயவரலாறு | 04 |
| 09. | திரு.V. கனகசிங்கம் (முன்னாள் அதிபர்) | |
| 07. | குடமுழுக்கு (திரு இ. நாகலிங்கம்) | 07 |
| 08. | திருக்குறுந்தொகை (கவிதை) | 08 |
| 09. | விநாயகரின் தோற்றம் பற்றிய புராணங்களும் அவை உணர்த்தும் தத்துவங்களும் (திரு. K. நாகேந்திரா) | 10 |
| 10. | விநாயகக் கடவுளின் திருவுருவமும் தத்துவமும் (திருமதி P. யோகேஸ்வரி) | 12 |
| 11. | விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானின் மூர்த்தங்கள் (திரு. T. மதிவண்ணன்) | 14 |
| 12. | விநாயக வழிபாட்டின் மகிமை (செல்வி. S. உமையேஸ்வரி) | 17 |
| 13. | விநாயக வழிபாட்டின் தொன்மை (செல்வி. P. ராதிகா) | 19 |
| 14. | விநாயக விரதங்கள் (செல்வி. A. மலர்ஞானதிருமேனி) | 21 |
| 15. | வெள்ளிப் பிள்ளையார் (செல்வி. T. சுபாஷினி) | 24 |
| 16. | பௌத்த மதத்தில் விநாயகர் (திரு. S. யோகானந்தம்) | 25- 26 |
| 17. | பிறநாடுகளில் பிள்ளையார் வழிபாடு (திரு. ச. தயாபரன்) | 27 - 28 |
| 18. | புகைப்படங்கள் | 29 |
| 19. | ஸ்ரீ ஞான விநாயகர் ஆலய புனருத்தாரண குழுக்கள் | 32 |
| 20. | சிரேஷ்ட, கனிஷ்ட ஆசிரிய மாணவர் விபரம். | |
| 21. | நன்றி நவிலல் | 38 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேச, நின் பதமலர் தொழுதாம்.



நிருவி கற்பமாய், நிறைந்தஆ னந்தபூ ரணமாய்,
நிருவி காரமாய், நிர்க்கணமாய், அத்து விதமாய்,
நிருவி சேடமாய், நிரஞ்சனமாகி, ஒன்றாலும்
நிருமி தப்படாக் கணேச, நின் நீள்கழல் தொழுதாம்

பிரமமாய், ஒளியாய், நிராகாரமாய்ப், பெரிதாய்த்,
தரணி யாதிதத் துவமெலாங் கடந்ததத் துவமாய்,
வரமெ லாந்தரும் வள்ளலாய், ஏகமாய் வதியும்
பரம னாகிய கணேச, நின் பதமலர் தொழுதாம்.

என்றும் நீங்குறாத் திருவுரு வுடையதாய், எங்கும்
ஒன்றி நின்றுணர்ந் திடும் அறி வானந்த உருவாய்த்,
துன்றும் யோகியர் தியானிக்கப் படுஞ்சுக மாகிச்
சென்று சேர்தராக் கணேச, நின் திருவடி தொழுதாம்

உலக காரண காரணமாய், உயிர்க் குயிராய்,
இலகு ஞானியர் தமை இழந் தெய்துநற் பேறாய்ப்.
பலவு மாய்ப்பரப் பிரமாய்ப், பரேசமாய்ப் பரமாய்த்
திலக மாகிய கணேச, நின் திருவடி தொழுதாம்

சகல லோகமும் படைத்தளித் தழிக்குந்தற் பரமாய்,
அகில லோகத்தும் புகலிடந் தனக்கிலா அமைவாய்ப்,
புகலு லோகங்கள் அனைத்திற்கும் புகலிடந் தானய்ப்
பகவ னாகிய கணேச, நின் பதமலர் தொழுதாம்

உலகத்துக் காதியாய்த், தேவருக் காதியாய், உலவாச்
சுகத்துக் காதியாய்ச் சுரர்களுக் கீசராய்ச், சுடரும்
மகத்துக் கீசராய்க், கணங்களுக் கீசராய் மதிப்போர்
அகத்துக் கூடிய கணேச, நின் அடியிணை தொழுதாம்

இராச தத்தொழி லாகிய சிருட்டியை இயற்ற
விராவி ராசதத் துருக்கொடு பிரமனாய். மேலாய்ப்,
பராவு வித்தைகள் அனைத்திற்கும் பயில்பிறப்பிடமாய்
ஓராது நின்றருள் கணேச, நின் ஒளிர் பதந் தொழுதாம்

சோர்வி லாதசாத் துவிகநற் றொழிலெனுந் திதிக்குச்
சார்வ தானதா மதந்தனில் உருவுகொண் டரியாய்த்,
தீர்வி லாப்பகை அசுரரைச் செகுத்திடுந் தேவர்க்
கார்வ மேயருள் கணேச, நின் அருட்பதந் தொழுதாம்

தாம தத்தொழி லானசராங் காரமாற் றுதற்குத்
தோம கற்றுசாத் துவிகத்தில் தோன்றுருத் திரனாய்,
ஏம முற்றிமை யோர் முனி வோரெல்லாம் இறைஞ்சச்
சேம வைப்பதாங் கணேச, நின் சேவடி தொழுதாம்

கிரண பந்தியாற் பயிரையும் கிளர்சுதைப் பெருக்கால்
பரவு தேவர்கள் தம்மையும் மகிழ்வித்துப் பார்ப்பார்க்
காசனாய், உலகத்துவெப் பறுத்திடுந் திங்கட்
சொருவ மாகிய கணேச, நின் துணையடி தொழுதாம்


ஒளிப்பி ழம்பதாய், யோகவா யுவினுருவாகி,
விளிப்பில் காலங்கள் தெரிப்பதாய்த் தொழிலெலாம் விளைத்துக்
களிப்ப தாய்ப்பல சத்திய தான செங் கதிராய்த்
தெளிப்ப நின்றருள் கணேச, நின் சேவடி தொழுதாம்

நிரப்பில் தன்மயமாய்த், துறக்கமாய், நிறைந்த தத்துவமாய்த்
தரைச்சொ ரூபமாய்ச் சமுத்திரமாய்த் திசைச்சுரராய்க்
கரப்பி லாஉல கனைத்துமாய்க் கலந்துநின் றருளும்
பரப்பி ரம்மமாங் கணேச, நின் பாதங்கள் தொழுதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலவர் படம்




தேவர்தொழு தெழுங்கருணைச் செல்வனே போற்றி!
சிறந்தொளிரு மங்கலசொ ரூபனே போற்றி!
ஓவறுசித் திகளனைத்தும் உதவுவோய் போற்றி!
ஒலிகெழுகின் கிணிபாத சால நூ புரங்கள்
மேவியொளிர் சரணனே போற்றி! மத தாரை
விரவியதிண் கபோலனே போற்றி! நினதருளால்
பாவமொடு பலபிணியும் பம்புவறு மைகளும்
பலவான இடர்களையும் பாற்றுக இன் புறவே.

(சகத்திர நாமப் படலம்)

இதனை விடியலில் எழும்போது ஓதுகின்றவர்கட்கு நோய்கள் வாரா; வறுமை நீங்கிச் செல்வம் மிகும்; எண்ணிய செயல் முற்றுப் பெறும்; வினைகள் நீங்கும்; மெய்யுணர்வு உண்டாகும்.

## எழுந்தருளிகள் படம்



இடமிருந்து வலமாக முறையே இடர்கடி கணபதி, இறை, உமை ஆகிய எழுந்தருளி விக்கிரகங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

## இதழாசிரியரிடமிருந்து............

மட்டுநகர் ஆசிரியர் கலாசாலை வளாகத்தின் கண்ணே கோவில் கொண்டு, தோன்றாத் துணையாக இருந்து எம்மையெல்லாம் ஆண்டு, கல்வியும், கலைஞானமும் நலம் பெற நல்கும் ஞான விநாயகரின் பாதார விந்தங்களுக்கு முதற்கண் சிரம் தாழ்த்துகிறேன்.

நாடெங்கனும் ஆலயம் அமைத்து ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறப்புடன் வாழ்ந்தனர் எம்முன்னோர். அவர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம் பெரும் சைவப் பாரம்பரியங்களை அருமையாய்ப் பேணிப் பொலிவுறக் காப்பது எம் தலையாய கடமையாகும். இக்கும்பாபிஷேக மலரிலே இடம் பெற்றுள்ள ஆலயத்தின் வரலாறும், அவற்றோடு தொடர்புடைய வழிபாட்டு மரபு முறைகளைக் கொண்ட சிந்தனைக்கு விருந்தாக அமையும் கட்டுரைகளும் எதிர்கால சந்ததியினருக்கு இன்றியமையாதவை. இவற்றைக் கருத்தில் கொண்டு இப்புண்ணிய கைங்கரியத்தை நிறைவேற்ற ஞானமுதல்வர் எமக்கு அருள் பாலித்தமை கிடைத்தற்கரிய பெரும் பேறெனக் கருதுகின்றேன்.

நான் அன்று கலாசாலையில் காலைக் கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திராத போதும் கூட என்னை ஞானவிநாயகர் ஆலயக் கும்பாபிஷேக மலராசிரியராகத் தெரிவு செய்து அனைவரும் ஏற்றுக் கொண்டது எத்துணையும் பொருத்தமில்லை என நினைத்தேன். எனினும் அனுபவம் குறைந்த சிறியோனாகிய எனக்கு ஞான விநாயகர் பக்க பலமாக இருந்து நெறிப்படுத்துவார் என்ற மனத்திடத்துடன் பொறுப்பளித்தவர்களை மதிப்பளிக்கும் நோக்கோடு இவ்அரிய பணியை பணிவுடன் ஏற்று பொறுப்பு வழங்கியவர்களை நன்றியுடன் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

இத்தருணத்தில் பல திறத்தாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக்கென ஏற்பட்ட செலவில் ஒரு பகுதியை வழங்கி உதவிய ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா அவர்கட்கு மலர்க்குழு சார்பிலும் கலாசாலை சார்பிலும் மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதொடு கும்பாபிஷேக நிகழ்வுகளிலும் சுவாமி அவர்கள் கலந்து கொண்டது வரவேற்கத்தக்கது.

இன்னல் பல சூழ்ந்த இக்கால வேளையிலும் ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள் ஆக்கங்கள் வேண்டி அணுகிய போது இம்மலருக்கு மணம் பெருக்கும் உயரிய நோக்கோடு உரிய வேளையில் அவற்றை வழங்கி உதவிய சிவத்திரு சுவாமிகட்கும் அறிவுசால் பெரியோர்கட்கும் என்றும் எனது அன்புனக்கே உரித்தான ஆசிரிய சகோதரங்கட்கும், அத்தோடு இம்மலரை வடிவமைத்து ஆக்கங்களுக்கான தலைப்புக்க ளையும் வழங்கி அவற்றைச் செவ்வை பார்த்து அச்சிடுவதற்கென ஞான விநாயகரால் எனக்கு அளிக்கப்பட்டு கொடையாக நான் கருதும் துணைமுதல்தவர் செ. வினாசித்தம்பி ஐயா அவர்கட்கும் மலரைச் சிறந்த முறையில் ஆக்கவேண்டும் என்ற நோக்கோடு என்னுடன் கூட உழைத்த நிருவாக சபைத் தலைவர் V.மோகனதாஸ் அவர்கட்கும், உரிய கால வேளையில் இம்மலரை அச்சிட்டு வெளியிட உதவிய ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சக முகாமையாளர், ஊழியர்கட்கும், படப்பிடிப்பாளருக்கும் பின் அட்டைப்பட விளம்பரம் வழங்கிய யுனைட்டட் புத்தக நிலைய உரிமையாளருக்கும் இவற்றையெல்லாம் நெறிப்படுத்திய V.லக்ஷுமிசுந்தரம் பிரதி முதல்வர் அவர்கட்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் இம்மலர் வெளியீட்டுக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய நலன் விரும்பிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தனைக்கும் மேலாக இப்பணிகள் யாவும் செவ்வனே நிறைவேற அருட்பார்வை செலுத்திய ஞான விநாயகருக்கு மேலான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு அவருடைய திருப்பாங்களில் இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

நன்றி!

**இ. நாகலிங்கம்**
**இதழாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான விநாயகர் அருள்

தன்னை நினைந்து வழிபடுவோர்களின் துயர்களைத் துடைக்கும் கருணை நிறைந்த ஞான விநாயகர் குடி கொண்டுள்ள ஆலயத்தின் திருப்பணி வேலைகளில் ஈடுபட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகவே நான் கருதுகின்றேன். இவ்வாலயம் கும்பாபிஷேகம் நடைபெற்றுப் பத்து வருடங்களுக்கு மேலாகின்றது என்பதை எங்களுக்கு அறிவுறுத்துவதற்கு அடையாளமாக மூலஸ்தானத்திற் மேற்றாளத்தில் வெடிப்பை உண்டாக்கி நீர் ஒழுக்கை ஏற்படுத்திய அவரது அற்புதங்களில் ஒன்றாகும். அதற்கமைய அந்தப் பகுதினைச் சீர்படுத்தி மீண்டும் கும்பாபிஷேகம் செய்வதற்காக சலாசாலையின் துணை அதிபர் செ. வினாசித்தம்பி அவர்களின் ஆலோசனையின் பேரில் 24.06.1998 அன்று கலாசாலையின் அதிபர் V.கனகசிங்கம் பிரதி அதிபர் V.லக்ஷுமிசுந்தரம், விரிவுரையாளர் P.கோவிந்தராஜா முன்னிலையில் மாணவர்களுடன் கலந்தாலோசித்து இப்பரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்டது.

திருப்பணி வேலைகளின் ஆரம்பக் கட்டமாக 15.03.99 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமாயின. இவ் வேலைகளுக்குத் தேவையான நிதி அப்போது இக்கலாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவ்வாறு வேலைகள் துரிதமாக நடைபெற்று வரும் வேளையில் ஞானவிநாயகன் திருவருளினால் இவ்வாலயம் ஒரு முழுமையினைக் காண்பதற்காக மடைப்பள்ளி, தெற்கு வாசல் ஆலயம் மூசிகம், பலிபீடம் போன்றனவும் அமைப்பதற்கான தீர்மானங்களும், நிறைவேற்றப்பட்டன. இதற்கான நிதி போதியளவு கிடைக்காத காரணத்தினால் ஆலயத் திருப்பணி வேலைகள் இடையில் ஸ்தம்பிதமடைய நேரிட்டது. இதற்கான நிதியைத் திரட்டுவதற்காக ஆசிரிய கலாசாலை மாணவர்களுள் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களிலும், நலன்விரும்பிகளிடமும் இதற்கான நிதியைத் திரட்டுவதில் ஈடபட்டனர். சேகரித்த நிதியின் உதவியுடன் ஆலயத் திருப்பணி வேலைகள் தடங்கலன்றி நடைபெற்று, கும்பாபிஷேகம் நடாத்துவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வலஞ்சுழியாக அமைந்த துதிக்கையை சிறப்பம்சமாகக் கொண்ட மூலமூர்த்தியை உடைய இவ்வாலயத்தை அழகாக மெருகூட்டிய கட்டிடக் கலைஞர் கல்லடி ஞா.ஆனந்தராஜா குழுவினர்களுடன் இவ்வாலயத்திற்கான வர்ணப் பூச்சினைச் செய்த வர்ணக் கலைஞர் ஆரையம்பதி த.ஜெகதீஸ்வரன் தமது முழுத்திறமையையும் பயன்படுத்தி கணபதியின் பல்வேறு வடிவங்களையும் ஆலயத்தில் அமைந்து ஆலயத்தின் வனப்பை மேலும் மெருகூட்டியுள்ளார். அத்தோடு இந்தியாவிலிருந்து பெறப்பட்ட விநாயகர் எழுந்தருளியும், மட்டக்களப்பு முனைத்தீவு திரு.வேதவனம் ஆச்சாரி வடிவமைத்த நடராஜர், சிவகாமி விக்கிரகங்களும் இவ்வாலயத்தில் முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத் திருப்பணிகள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு எனக்கு பல வழிகளிலும் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் வழங்கிய துணை அதிபர்களான திரு..செ.வினாசித்தம்பி, திரு.வி.லக்ஷுமிசுந்தரம் ஆகியோருக்கும் மேலும் இக்குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு தமது சேவைகளை அர்ப்பணித்த அதிபர்கள் திரு.வி. கனகசிங்கம் திரு.வி.தெய்வேந்திரன் ஆகியோருக்கும், மற்றும் இக்குடமுழுக்கினைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த பிரதிஷ்டாகுரு கா.கு.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் தலைமையிலான குருமார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, எங்கள் மேல் நம்பிக்கை வைத்து திருப்பணி வேலைகளும், குடமுழுக்கு விழாவும் மிகச்சிறப்பாக அமைய என்னோடு தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பும், உதவியும் வழங்கிய 2ம் வருட, 1ம் வருட ஆசிரிய மாணவர்களுக்கும், மேலும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பும், உதவியும் நல்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைவதோடு ஞான விநாயகரின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

வே. மோகனதாஸ்

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன் நிலையத்து அடிகளார் அருளிய ஆசிச்செய்தி

சிவதொண்டன் நிலையம்,
செங்கலடி.

"தந்தி முகதனைச் சங்கரன் மைந்தனை
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திர னுக்கருள் ஈந்த இறைவனை
மந்திர ரூபனை நான்மற வேனே"

- நற்சிந்தனை

ஆலயங்களிற் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குச் செய்தல் வேண்டும என்றோர் ஆகமவிதிமுறை உளது. நித்திய பூசைகளிலும் மகோற்சவங்களிலும் ஏற்படும் குறைகளைத் தீர்த்தற் பொருட்டும், கட்டிடங்களில் புகும் பழுதுகளைத் திருத்தற் பொருட்டும், அறிந்தோ அறியாமலோ நேர்ந்த ஆசௌசங்களுக்கு பிராயச்சித்தம் செய்தற் பொருட்டும் இந்தக் குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தி செய்யப்படுகின்றது. பெருமான் தூயனென்றும், குறைவிலா நிறைவினனென்றும், நித்தமணாளனென்றும், நிரம்ப அழகியனென்றும் போற்றப்படுபவனல்லவா! அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோயிலும் தூயதாயும், நிறைவினதாயும், அலங்காரமானதாயும் அழகியதாயும் இருப்பது முறைமையன்றோ! ஆதலினாலே "பழுது புகுந்தமை தீரப் பவுத்திரமாம் செயல்" புரியப்படுகின்றது.

ஞான விநாயகர் ஆலயம் ஆவர்த்தம் செய்யப்பட்டுப் பன்னீராண்டு தொடங்கும் பருவத்தில் இப்புனராவர்த்தம் காண்பது ஓர் அருட் செயலேயாகும். உள் நின்று இயக்கும் இயவுள் தக்க தருணத்தில் தக்கவர்களின் உள்ளத்தே நின்று இயக்கி இக்கைங்கரியத்தை ஆற்றியுள்ளது என்பதே அமைவுடைத்து. ஆகமங்கள் கூறும் ஆலயக்கிரியைகள் ஆழ்ந்த் பொருளுடையவை. கும்பாபிஷேகக் காலத்தில் நிகழும் விரிவான கிரியைகளைப் பத்தி சிரத்தையுடன் கூர்ந்து நோக்கி நிற்கும் ஆற்றல் மிக்க அன்பாளர் இதனை நுட்பமாக உணர்தல் கூடும். ஆகமமாகி நின்று அண்ணிப்பான் என்பதற்குத் தக்க விளக்கமாயமைவன இக்கிரியைகள்.

ஓராலயத்துக்குக் குடமுழுக்குகாலம் பொய்யாவானம் புதுப்பெயல் பொழியும் கார்காலத்தைப் போன்றது. பாரின்பவெள்ளங்கொளப் பெருமான் மூலபண்டாரம் வழங்கும் காலம் இக்காலம். ஆதலாலே கும்பாபிஷேக காலத்தில் ஆலய தரிசனம் செய்வது பெரும் பாக்கியப்பயன் எனக் கூறப்படுகின்றது.

அஞ்ஞானம் அகற்றி நல்லறிவுச்சுடர் கொளுத்தும் ஞானவிநாயகர் அருளாட்சி என்றும் நின்று நிலவுக

"பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதியென்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை."

- சிவதொண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAMAKRISHNA MISSION

(CEYLON BRANCH)
ASHRMA & CHILDREN'S HOMES,
RAMAKRISHNAPURAM, BATTICALOA. SRILANKA.
☎ :065 - 22752


## ஞான விநாயகரே போற்றி

'கஜானனம் பூத கணாதிஸேவிதம்,
கவித்தஜம்பூபலஸார பசஷிதம்
உமாஸுதம் சோகவினாச காரணம்
நமாமிவிக்னேச்வரபாபங்கஜம்'

மூர்த்தி ஒன்று அமைத்து அதன் மூலம் முழுமுதற் பொருளைப் போற்றுவது மக்கள் கடைப்பிடிக்கும் முறையாகும். இந்துமத ஆலயங்கள் எல்லாவற்றிலும் எழுந்தருளி இருப்பவர் விநாயக்கடவுள். அதற்கு மேல் அவருக்கென்று தனிக் கோயில்களும் உள்ளன. இவைக ளெல்லாம் விநாயகரின் மகத்துவத்தையும் அருளாசியையுமே உணர்த்துகின்றன. ஆகம விதிகளுக்குட்பட்டும் அது கடந்த நிலையிலும் விநாயக வழிபாடுகள் இருக்கின்றன.

அருவ நிலையில் எங்கும் நிறைந்திருந்த திருவருளை உருவத்தில் வெளிப்பட வைத்து வாங்கிக்கொள்ளும் விழாவே குடமுழுக்குப் பெருவிழா. அரசினர் ஆசிரியகலாசாலையில் நீண்டகாலமாக கோயில் கொண்டிருக்கும் ஞானவிநாயகருக்கு மீண்டும் ஒரு குடமுழுக்கு வைபவம் நடைபெறத்திருவருள் பாலித்தது நமக்குக் கிடைத்த அருட் கொடையேயாகும்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியகலாசாலை கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் இப்பிரதேசத்தின் தமிழ் இந்து மதப்பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதில் முன்னின்றுழைத்து வந்திருக்கிறது என்பது பெருமையுற வேண்டியதாகும். அதன் வழியில் இந்த ஆலயத்தை அமைத்து அருள்பாலிக்கும் ஞான விநாயகரைத் தன்னகத்தே கொண்டு நிகழ்த்தப்படும் இப்பெருவிழா, எல்லோருக்கும் வெற்றியையும் நிலைத்த சமாதானத்தையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்,

சுவாமி ஜீவனாந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Hidua Samaya Abhivritti Sabha

# இந்து சமய அபிவிருத்தி சபை

**Reg. No. HA/4/TM/50**

## மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆலய கும்பாபிஷேக ஆசிச்செய்தி

தங்கள் கலாசாலை வளாக ஆலயத்தின் கும்பாபிஷேகம் விரைவில் நடைபெறப் போவதையிட்டு மகிழ்ச்சி. நவீன யுகத்தில் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் எமது ஆன்மீகக் கடமைகளையும் நாம் மறத்தலாகாது. இனி வரும் தலைமுறையினர் ஒவ்வொருவரும் நற்பிரஜைகளாக உருவாக்கப்படுவதில் ஆசிரியர்களுடைய பங்களிப்பின் முக்கியத்துவத்தை நாம் மறத்தலாகாது. எனவே ஆசிரியர் பயிற்சி என்பது சமுதாய வளர்ச்சியின் பங்களிப்பில் ஒரு முக்கியம்சமாகும். கல்வி வளர்ச்சியுடன் எமது சமயப்பாரம்பரியங்களையும் பேணுவதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஒருவன் கல்வியில் சிறந்தவனாயிருந்தாலும் மிகுந்த செலவமுடையவனாக விளங்கினாலும் அவன் பக்திமார்க்கத்தில் ஒழுகாதுவிடின் அவனது வாழ்வு சீரானதாய் விளங்காது. இதன் பிரகாரம் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை வளாக ஆலயம் கட்டியெழுப்பப்பட்டு கும்பாபிஷேகம் கண்டு நிற்பது பாராட்டுதற்குரிய செயலாம்.

ஆசியுடன்

Swami Tantradeva

(சுவாமி தந்திரதேவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/ ஆசிரியர் கலாசாலை ஞான விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக பிரதமகுரு கலாநிதி கா.கு. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள் மனமுவந்தளித்த ஆசியுரை

பாரக்குமிடமெங்கணும் நீக்கமற நிறைகின்ற பரமானந்தப் பொருளாகிய ஞான விநாயகனின் திருவடியைச் சிரமேற்றாங்கி எனது நல்லாசியை மேற்கொள்கின்றேன். தனக்கு மேற்பட்ட தலைவன் இல்லாதவன் விநாயகன். விக்கினங்களை நீக்குவதால் விக்கினேஸ்வரன் எனும் பெயரையும் உடையவர். அகத்திய முனிவர் கமண்டலத்தில் அடக்கி வைத்திருந்த காவிரி நீரை உருவிச் சென்று வாயினாற் கவிழ்ந்து தமிழ் நாடெங்கணும் வற்றாத ஜீவ நதியாக இன்றும் பாய்ந்து கொண்டிருக்கச் செய்தவர். தமிழ்த் தொண்டு செய்த ஔவைப்பிராட்டியாரிடம் பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் பெற்றுக் கொண்டு, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் வாரி வழங்கியவர். இன்னும் பல புகழ்களையும் தன்னிடத்தே பொருந்தியவர். விரிவஞ்சி விடுக்கின்றனம்.

விநாயகர் வழிபாடு இலங்கையில் மாத்திரமன்றி, தாய்லாந்து, கம்போடியா, பாலித்தீவு முதலான பல நாடுகளிலும் பரவி உள்ளது. தற்போது விநாயகர் வழிபாடு உலகமெங்கணும் பரவி வருகின்றதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். விநாயகர் வழிபாடு மிகவும் எளிமையானது. ஒரு பிடிகோமயம், அல்லது ஒரு பிடி மஞ்சள் மாவும் ஒரு அறுகம் புல்லும் இருந்தால் விநாயகர் வழிபாட்டை ஆரம்பிக்கலாம்.

சமஸ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் இரண்டினதும் சேர்க்கையே விநாயகப் பெருமான். அதனாலேயே "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என போற்றப் படுகின்றார். இத்துணைப் பெருமை வாய்ந்த ஞான விநாயகர் மட்டக்களப்பு' அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மாத்திமே வீற்றிருந்து அருள் புரிகின்றார். அவரின் திருவருள் மட்டக்களப்பு வாழ்மக்கள் எல்லோருக்கும் கிடைக்கப் பெற்று, எல்லோரும் நலமே வாழ எனது ஆசியை மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"சர்வே ஜனாகா சுகினோ பவந்து"

**கலாநிதி கா.கு.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்/ கோட்டைமுனை ஆசிரிய கலாசாலையில் அமைந்துள்ள ஞானவிநாயகர் ஆலய பிரதம குருவின் ஆசியுரை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் மீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

ஞான விநாயகனைத் தொழ வினைகள் அறுமே
தும்பிக்கையானைத் தொழ நம்பிக்கை வந்திடுமே
வேழ முகத்தானைத் தொழ ஞானமும் கல்வியும் இணைந்திடுமே
கோட்டைமுனை ஆசிரிய கலாசாலை விநாயகனைத் தொழ
விக்கினங்கள் மறைந்திடுமே.

சமய மறுமலர்ச்சிக்கும் ஆன்மீக வாழ்வின் முழுமுயற்சிக்கும் கோயில்கள் சிறந்த பங்கை வகிக்கின்றன. இளைய தலைமுறையினராகிய எங்கள் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களின் அயராத முயற்சியின் காரணமாக இன்று ஐப்பசி வெள்ளி 12ம் நாள் காலை 8.30 மணிக்கு ஆசிரிய கலாசாலையில் அமைந்திருந்து தன்னை வழிபடும் அடியார்கள் அனைவருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஞான விநாயக மூல மூர்த்திப் பெருமானுக்கு ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெற அருள் பாலித்துள்ளது.

மூலமூர்த்தியை மட்டும் கொண்டு விளங்கிய ஆலயம் புதுப்பொலிவுடன் நிறைவு பெற்று மூசிகம், பலிபீடம், உற்சவ மூர்த்திகளாக நடராஜப் பெருமானையும், எழுந்தருளி விநாயகப் பெருமானையும் கொண்டு இன்று குடமுழுக்கு காணுகின்ற பெருமை ஆசிரிய மாணவர்களின் அரும் பெரும் சேவையின் அயராத முயற்சி என்று சொன்னால் மிகையாகாது. இந்த முயற்சிக்கு பங்கேற்று தலைமை தாங்கி நடாத்தும் தலைவரின் தன்னலமற்ற சேவையும் அவருடன் கூடிய சகல ஆசிரிய மாணவர்களின் ஒத்துழைப்புமே இவ்விழா எடுப்பதற்கு வழிகோலியது. அத்துடன் அறிவாற்றல் மிக்க அதிபர் விரிவுரையாளர்கள், மற்றும் பொதுமக்கள், பழைய ஆசிரிய மாணவர்களின் பங்களிப்பும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும் முன்தோன்றிய மூத்த மதம் இந்து மதம், இந்துக்களின் வாழ்க்கையைச் செம்மையாக்கி வளம் பெருக்குவதும் இந்துமதமே. மனித சமுதாயம் பல பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்கியுள்ள வேளையிலும் சமுதாயத்திலே நல்ல மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். சமுதாயத்தை வாழ்க்கை நெறியாக மாற்றியமைக்க வேண்டும் என்ற பொது நோக்கில் சகல ஆசிரிய மாணவர்களின் பூரண ஒத்துழைப்பே தனி விநாயகப் பெருமானாக இருந்தவர் இன்று மூசிகம், பலிபீடம், எழுந்தருளி நடராஜர், விநாயகப் பெருமானுடன் விளங்குகின்றார். சகல அடியார்களுக்கும் விநாயகப் பெருமானின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிரம்ஸ்ரீ தி. சரவணபவ சர்மா
பிரம்மஸ்ரீ ச. அபராஜித சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

எமது கலாசாலை வளாகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீஞானவிநாயக ஆலய கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டுக்கு ஆசிச்செய்தியை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பதினொரு வருடங்களுக்கு முன்னதாக கும்பாபிஷேகம் செய்யப்பட்ட இவ் ஆலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய வேண்டிய நிலை உணரப்பட்டதால் 98/99/2000 ஆம் ஆண்டு ஆசிரியப் பயிலுநர்களின் உழைப்பினாலும் விரிவுரையாளர்களது அயரா முயற்சியினாலும் புதுப்பொலிவு காணமுடிந்தது.

1988 இல் ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட வேளையில் எமது ஆலயத்திற்கு பலிபீடமோ, எழுந்தருளி விக்கிரகமோ, மடப் பள்ளியோ இருக்கவில்லை. அக்குறையைப் போக்கிய பெருமை இக்காலப் பயிலுநர்களையும் விரிவுரையாளர்களையுமே சாரும். இத்தனை பணிகளையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கு திருவுளம் கொண்ட ஞான விநாயகரது பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

பொதுவாக நோக்குமிடத்து இவ் ஆலய நிர்மாணிப்புப் பணியானது இதுவரை காலமும் பயிற்சி பெற்றுள்ள சகல ஆசிரிய மாணவர்களினதும் கூட்டு முயற்சியினால் கிடைக்கப் பெற்ற வெற்றியின் சின்னமாக மிளிர்கின்றது எனலாம்.

இவ் அரிய திருப்பணியை நிறைவேற்ற அயரா முயற்சியுடன் ஈடுபட்ட ஆசிரியப் பயிலுநர்களுக்கும் அவர்களை நெறிப்படுத்திய அறிவுசார் ஆசான்களுக்கும், கேட்ட போதெல்லாம் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பண உதவியும், சரீர உதவியும் வழங்கிய திருத்தொண்டர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், மலரமைப்புக் குழுவினருக்கும் ஞான விநாயகரது அருட்கடாட்சம் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். இவை அத்தனையும் நிறைவேற நெறிப்படுத்திய முன்னாள் அதிபருக்கும் எனது நன்றிகள்.

**வ. தெய்வேந்திரன்**
**அதிபர்**
**ஆசிரியர் கலாசாலை**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர்
## திரு சீ. தெய்வநாயகம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஞான விநாயகர் ஆலயத்தின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாஷேகம் நடைபெறும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது நல்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கலைஞானத்தின் திறவுகோலாக விளங்கும் ஞான விநாயகரை ஸ்தாபித்து அவருக்கு குடமுழுக்கு காணும் கலாசாலை ஆசிரிய மணிகள் மிகுந்த பாக்கியசாலிகளாகும். இந்நாள் அரசினர் ஆசிரிய கலாசாலை வரலாற்றிலே மிகவும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள் ஆகும்.

கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கான ஆசிரிய மணிகளைப் பயிற்றுவித்து சமூகத்தின் மத்தியில் உயர்வுபெற வைத்துள்ளது, பெருமை வாய்ந்ததொன்றாக இருந்தாலும் கூட, இன்று ஞான விநாயகருக்குக் குடமுழுக்குக் காண வைப்பது, பேறுபெற்ற கைங்கரியமாகும்.

"ஆலயத் திருப்பணி ஆத்மதிருப்தி" இத்திருப்பணி முயற்சியில் ஈடுபட்டு உழைத்த அனைவருக்கும் ஸ்ரீ ஞான விநாயகர் உறுதுணையாக நின்று, அருள் சுரந்திட, அவர் திருப்பாதங்களை வேண்டுகின்றேன்.

ஸ்ரீ ஞான விநாயர் பெருமைகளை உணர்ந்து அவரது இன்னருளை என்றும் பெற்றிட கலாசாலையில் கல்வியைத் தொடரும் அனைவரும் பாடுபட வேண்டும். இவ்ஆலயத்தின் தேவைகளை உணர்ந்து கருமமாற்றிடவும், நாள் தவறாத பூசையுடன் உள்ளத்தூய்மை கொண்ட வழிபாடும், ஞான குரவருக்கு என்றும் கிடைத்திடவும் உரியவர்கள் முனைந்திட வேண்டும்.

ஸ்ரீ ஞான விநாயகரை வழிபாடுவோருக்கு மன வல்லமையும் மனம் தளரா உறுதியையும், தெளிவுள்ள திருப்தியான கல்வியையும் என்றும் கொடுப்பதோடு குடமுழுக்கு இனிதே நடந்தேற ஞான விநாயகர், திருவருளை நினைந்து என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சீ. தெய்வநாயகம்)
உதவிப்பணிப்பாளர்,
இந்துசமய பண்பாட்டு அலுவல்கள்
திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு அரசாங்க ஆசிரியர் கலாசாலை வளவில் அமைந்துள்ள ஞான விநாயகா ஆலயத்தின் மகா கும்பாவிஷேகத்தைக் குறிக்குமுகமாக வெளியிடப்படும் நினைவுமலருக்கு ஆசிச் செய்தியை வழங்கும் வாய்ப்பினை அளித்து அருள் பாலித்தமைக்கு முதற்கண் ஞான விநாயகப் பெருமானுக்கும், அடுத்ததாக மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலக இதிகாசங்களில் மாபெரும் இதிகாசமாகிய மகாபாரதத்தை எழுத்துருவில் வடிப்பதற்கு வேதவியாசருக்கு அருள் பாலித்த விநாயகப் பெருமானுக்கு, ஆசிரியர் கலாசாலையில் கோவிலமைத்து, அப்பெருமானை வணங்குவது, சாலப் பொருந்தும் உலகின் உயர் புகழ் பெற்றுள்ள தொழில்களி லொன்றாகிய கற்பித்தல் தொழிலைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு. அப்பெருமான் ஆசிரியர்களுக்கு எப்போதும் அருள் பாலிப்பாராக, ஒரு நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வகிக்கும் மாணவர் சந்ததியினரை உருவாக்கும் பெருபணியை நிறைவேற்றிவரும் ஆசிரியர்களுக்கு விநாயகரின் அருள் என்றும் கிடைப்பதாக

ஞான விநாயகர் ஆலயத்தின் கும்பாஷேகம் இனிது நிறைவேற ஆண்ட வனை வேண்டிக் கொண்டு, இக்கைங்கரியத்தைப் பூர்த்தி செய்வதற்கு உழைத்த சகலருக்கும் ஆண்டவன் அருள் கிட்டுவதாக.

A.Sivapurathiarasan

(ஏ. சிவபுரத்தரசன்)
பிரதி அஞ்சல், தொலைத்தொடர்புகள்
தொடர்புசாதன அமைச்சரின் இணைப்பதிகாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாள் ஆசிரியர் கலாசாலை முதல்வர் திரு.வ. கனகசிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எங்கும் துன்பமும் துயரமும் அழிவுகளும் உயிர் இழப்புக்களும் நிகழும் இக்காலகட்டத்தில் ஆசிரியர் கலாசாலை ஞான விநாயகர் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்குவதையிட்டு மனம் மகிழ்கின்றேன். ஆலயப் புனருத்தாரணவேலை மிகச் சிறிய அளவில் செய்வதாக மனங்கொண்டு கலாசாலை ஆலயபரிபாலன சபை வேலையை ஆரம்பித்த போதிலும், ஞான விநாயகனது திருவருளால் அது மேலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு விளங்குவது, இறைவன் திருவருளேயன்றி வேறொன்றுமில்லை. சென்ற இடமெல்லாம் வரவேற்பும் நிதியும் கொடுத்து உதவிய அன்பர்களுக்கு என்றும் நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அல்லும் பகலும் அயராது உழைத்த பரிபாலசபை நிர்வாகிகளுக்கும், அவர்களுடன் தளராது நின்று உதவிய திரு.வி.லக்ஷுமிசுந்தரமவர்களுக்கும், மற்றும் விரிவுரையாளர்களுக்கும் நன்றி சொல்வது கடமைப்பாடாகும். 29.10.1999 ஆந் திகதி இடம்பெறும் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெற என்றும் எங்களுக்கு அருள் தந்து விளங்கும் ஞானவிநாயகர் துணை நிற்பாராக. அன்பும் பண்பும் நிறைந்த இந்த ஆசிரிய மாணவர்களால் நிறைவேற்றும் இப்பணிக்கு எனது நல்லாசியை மனநிறைவுடன் வழங்குகின்றேன்.

**வ. கனகசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை
## மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை - கிறிஸ்தவ ஒன்றியம்

தமிழும் சைவமும் பிரிக்கமுடியாத ஒன்று. ஏனெனில் தமிழை வளர்த்த வர்கள் சைவ சமயத்தவர்கள். ஆனால் அந்நியர் வருகைக்குப் பின்னர் கிறிஸ்த வர்களும் இஸ்லாமியரும் தமிழ் வளர்க்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து இன்று முன் நிற்கின்றனர்.

தமிழ் இலக்கிய வடிவங்கள் எதுவாகவிருப்பினும் அதனைச் செயற் புகுந்த அறிஞர் முதலில் விநாயகப் பெருமானையே தமக்குக் காப்பாக முன்னிறுத்தி தம்பணியில் நிறைவு கண்டனர். அதினின்று "முந்தி முந்தி விநாயகன்" என்பது இந்துக்கள் மாத்திரமல்ல தமிழ் படிக்கும் எந்தத் தமிழர்க ளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். ஏனெனில் காவியங்களையோ காப்பியங்களையோ யாரும் விநாயகன் துதியை விலக்கி வாசிப்பதில்லை. அந்த வகையில் காரியத்தின் காப்பாளராக விநாயகர் ஏற்றுக் கொள்ளப்படு கின்றார்.

எமது ஆசிரியர் கலாசாலையிலும் ஞான விநாயகர் எமது கல்விக்கு காப்பாக விளங்குகின்றார். அந்த வகையில் கலாசாலை ஞான விநாயகர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதும், கும்பாபிஷேகம் செய்வதும் பொருத்தமான விடயமாகும். இவ்விடத்தில் கிறிஸ்தவ ஒன்றியம், இந்துமாமன்றப் புனருத்தாரண குழுக்களோடு ஒன்றிணைந்து பணியாற்றிப் பெருமை செய்கின்றது. இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

நன்றி!

**தலைவர்**
**ஏ. நவரெட்ணராஜாகுரூஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையினுள் அமைந்திருக்கும் அருள்மிகு ஞான விநாயகர் ஆலயக் கும்பாபிஷேகம் 29.10.1999 ஆந் திகதியன்று இடம் பெறவுள்ளமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியர் கலாசாலையில் கல்வி பயிலும் மாணவர்களது அயராத முயற்சியின் விளைவே இந்த நிகழ்வாகும். காலாசாலை ஆலயபரிபாலன சபை எடுத்து வரும் இந்த அரும்பெரும் முயற்சியை எண்ணி மக்கள் சந்தோஷமடைவார்கள். ஒரு கோயிலைப் புனரமைப்பதென்பது இக்கால கட்டத்தில் பெரும் சிரமான காரியமாகும். எங்கும் அழிவுகளும், துன்பங்களும் நிறைந்த இக்காலகட்டத்தில் முயற்சியானது சிறந்த பணியாகும். எல்லாருக்கும் நல்லருள் புரியும் ஞான விநாயகன் உலகில் சமாதானத்தை விரும்பும் இதயங்களில் குடிகொண்டிருப்பான் என்பது திடமான நம்பிக்கையாகும். இந்தக் கட்டத்தில் இத்திருக்கோயில் பணியில் என்னுடன் நின்று உழைத்த நல்லிதயங்களுக்கு நன்றி சொல்வதுடன் எனது நல்லாசியையும் வழங்குகின்றேன்.

**திரு.வி. லக்ஷ்மிசுந்தரம்**
**பிரதி அதிபர்**
**ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் புராணத்திலுள்ள
# தோத்திராட்டகம்

01. பந்த மகற்றும் அனந்தகுணப் பரப்பும் எவன் பால் உதித்குமோ.
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி யிருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ,
அந்த இறையாங் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றாம்

02. உலக முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள் எவன், அவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டுங் களைகண் எவன், அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணமடைகின்றாம்

03. இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீ ழும்பஞ் செனமாயும்.
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக் கருமம் எவனான் முடிவுறும். அத்
தடவு மருப்புக் கணபதிபொற் சரணஞ் சரணமடைகின்றாம்

03. இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீ ழும்பஞ் செனமாயம்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக் கருமம் எவனான் முடிவுறும் அத்
தடவு மருப்பக் கணபதிபொற் சரணஞ் சரணமடைகின்றாய்

04. மூர்த்தியாகித், தலமாகி. முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி, அறிந்தறியாத் திறத்தினாலு உயிர்க்குநலம்
ஆர்த்தி, நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன், அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணமடைகின்றாம்

05. செய்யும் வினையின் முதல்யாவன், செய்யப்படுமப் பொருள்யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப்பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளையின் ஊட்டிவிடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரணமடைகின்றாம்

06. வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன், விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும் விமலன் யாவன், விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியை புகழ்ந்து சரணமடைகின்றாம்

07. மண்ணின் ஓர்ஐங் குணமாகி வதிவான் எவன் நீரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன், தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன், வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக் கணபதியை அன்பிற் சரணமடைகின்றாம்

08. பாச அறிவீற் பசு அறிவீற் பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பயிலப் பணிக்கு மவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத் திகழச் சரணமடைகின்றாம்

(இவ்வெட்டுப்பாடல்களும் "**தோத்திராட்டகம்**" என வழங்கப்பெறும். இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதினோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர். எட்டு நாட்கள் ஓதினோரும் சதுர்த்தியன்று எட்டு முறை ஓதினோரும் அட்டமாசித்திகளை அடைவர். நாள்தோறும் பத்துமுறையாக இரண்டு மாதம் ஓதினோர்க்கு அரசர் வசியமாவர். அவ்வாறு இருபத்தொருமுறை ஓதினோர் மக்கட்பேறு, கல்வி, செல்வம், முதலிய எல்லா நலங்களையும் அடைவர் என்று விநாயகப் பெருமான் காசிபர் முதலியோர்க்கு அருளினமை விநாயக புராணத்துட் கூறப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ

சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் ஏதாவது செயலைச் செய்யத் தொடங்கு முன் பிள்ளையாரை நினைத்துக் கும்பிடுகின்றோம். எழுதத் தொடங்கு முன் பிள்ளையார் சுழியாகிய "உ" என்ற குறியை இட்டு எழுதத் தொடங்குகின்றோம். இவ் வழக்கம் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. இச்சுழியை இடுவது ஏன் என்று தெரியாமலே பலர் எழுதி வருகின்றனர். இப்படி எழுதுவதில் ஒரு முக்கியமான தத்துவம் - உட்பொருள் அடங்கியுள்ளது. இதனைப் பெரியோர்கள் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

ஒரு மனிதனின் சிந்தனைச் செயற்பாட்டின் மூல நிலையைப் பற்றித் திறவோர் மேல் வருமாறு கூறியிருக்கின்றனர். இருதயத்தில் இருக்கும் "அனாகதம்" என்ற ஆதார சக்தியின் வட்டமலர் இதழ்களில் உலவுகின்ற பிராண வாயுக்கள், ஒன்றுக்கொன்று வட்டமிட்டு உராய்ந்து கொள்வதனால் உண்டாகும் ஒலியாகிய நாதத் தொனியோடு, ஐம்புலன்களிலும் சென்று பழகிய மனமானது கலப்பதினால் உண்டாகும் உணர்ச்சியால் நேர்வதே சிந்தனையாகும்.

முற்கூறப்பட்ட ஆதார சக்தியானது தங்கி நிற்கும் இடத்திற்கு விந்து என்று பெயர். இச் சக்தியானது சில இதழ்கள் கொண்ட வட்ட வடிவமான ஒரு மலரென்றே தத்துவநூல்கள் கூறுவதால், இது தங்கும் மூலமான விந்து என்ற பொருளும் வட்ட வடிவமானதே. ஆகவே இவ் விந்துவின் அடையாளம் "0" ஆகும். இவ்வடையாளமே சகலதிற்கும் காரணமாயிற்று. "பிரதமம், பிந்துஸம், யுக்தம், த்விதியம், தண்டமுச்சதே" என்ற பிரமாணப் படி முதலில் விந்துவின் வடிவமும் இரண்டாவதாகத் தண்டம் ┐ என்ற (கோல்) வடிவமும் குறிக்க வேண்டி இருந்ததனால் அவ்விரண்டும் "0┐" இவ்வடிவம் பெற்று நிற்கின்றது. இதனை வரிவடிவமாய் எழுதும்போது இவ்வுருவம் அந்தரமாய் நிற்குமாதலால் அதற்கு ஓர் பீடம் அமைத்து முற்காலத்தவர் எழுதி வந்தமையினால் முடிவில் "உ" என்ற இக்குறி ஏற்பட்டு நிற்கிறது.

இது பிள்ளையார் சுழிதான் என்பதற்குரிய மார்க்கம் என்ன என்று பார்க்கும் போது பின்கண்டவாறு புலப்படுகிறது. அதாவது எவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் மாயையற்ற ஆதி மூர்த்தமாகிய நிர்மல விந்து ரூப சக்தியே துஷ்ட நிஸ்கிரக சிஷ்ட பரிபாலன நிமித்தம் சிவபெருமானுக்குப் பிள்ளையாய்த் தோன்றித் தம் பூர்வ வடிவைப் புலப்படுத்தினதாகையால் அவ்வாறு உதித்தவரைப் பிள்ளையார் என்றும் அவர் செயலாகிய செங்கோலும் அவர் வடிவாகிய விந்துவும் ஆகிய இரண்டும் கூடியதைப் "பிள்ளையார் சுழி" என்றும் கூறும் வழக்கமாயிற்று என்பது விளங்கும்.

வேறு விதமாகவும் இதன் தத்துவத்திற்குப் பொருள் உண்டு. பிரணவத்திலுள்ள நாதத்திற்கு வரி வடிவு கீறு; விந்துவிற்கு வரி வடிவு சுழி. இந்தக் கீறும் சுழியும் சேரும்போது யானையின் துதிக்கையின் வடிவம் கிடைக்கும். பிள்ளையாரின் ரூபம் பிரணவம். ஆதலால் அதன் பகுதிக ளாகிய நாதமும் விந்துவும் விநாயகரின் துதிக்கையாகின்றன. அதனால் விநாயகக் கடவுளின் திருமுகம் யானைமுகத்தைப் போன்று இருப்பதைக் காண்கின்றோம். பிள்ளையார் சுழி எனப்படும் "உ" என்னும் எழுத்தும் நாத விந்துக்களின் வடிவமாகும். அவை பாம்பினுடைய உடலையும் தலையையும் ஒத்திருப்பதனால் போலும் அவற்றிக்குக் காரணமாகிய குண்டலினி சக்தி பாம்பென்று நிருபிக்கப்படுகின்றது. பிள்ளையார் சக்தியின் பிரதான வடிவ மாறுதல்களை விநாயக புராணத்தில் காணலாம்.

"சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தையே"

என்று மனதால் நினைந்து செயலாற்றுவதும் எழுதத் தொடங்கு முன்னர் பிள்ளையார் சுழி இட்டு எழுதுவதும் ஆகியவை எடுத்துக் கொண்ட காரியங்கள் எல்லாம் விக்கினங்களின்றி வெற்றியோடு முடியும் என்பதை விளக்கவே ஆகும்.

சிவபெருமான் திரிபுர தகனம் செய்த காலத்தே தேரின் உருளை அச்சு முறிந்து விட்டது. இது சிவன் தன் காரியத்தைத் தொடங்கு முன் பிள்ளையாரை நினையாத தவறினால் தான் என்பது உணரத்தக்கது. எனவே மானிடராகிய நாம் இதன் பெருமையை மென்மேலும் உணர்ந்து எடுத்துக் கொண்ட காரியம் இனிதே நிறைவேற வேண்டுமென மனம், வாக்கு, காயம் மூன்றிலும் இத் தெய்வக் குறியை இட்டுத் தொடங்குதல் எக்காலத்திற்கும் சித்தி பயக்கும் வழியாகும் என்பதை அறிந்து, பிள்ளையார் சுழியின் மகிமையை எம்மவர் அனைவருக்கும் அறிவித்து, எமது அன்றாடக் கடமைகளை பிள்ளையார் சுழியுடன் தொடங்கி வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

**மா. செந்தில்நாதன்**
விஞ்ஞானப்பரிவு
விடுகையாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வழிபாடு

"தந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிற்றனைத் தோடணி செவியனை
இந்திரனுக்குக் கருளீந்த இறைவனை
மந்திர ரூபனை நான் மறவேன்"

(சிவயோக சுவாமிகள்)

இந்து சமயத்திலுள்ள அனைவரும், எச்செயலைத் தொடங்கினும் விநாயகப் பெருமானையே முதன் முதல் வணங்கித் தொடங்கும் வழக்கம் உடையவர்கள். யாவர்க்கும் 'முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுளதோ' என்றும் 'முன்னவனே யானை முகத்தவனே' என்றும் அடியார்கள் போற்றி செய்தனர். மந்திரங்கட்கெல்லாம் முதலாயுள்ள பிரணவம் எனப்படும் ஓங்காரம் விநாயகருக்கு உரியதாயிற்று. விநாயகரை இரு பிரணவங்களின் கூட்டத்தாற் தோன்றியவராகப் புராணங்கள் கூறும். சம்பந்தசுவாமிகள் தேவாரத்தில் "பிடியதனுருவுமை கொளமிகு கரியது வடிகொடு" என்று கூறியதும் நோக்கற்பாலது. "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்றபடி எல்லா ஓசை ஒலிகட்கெல்லாம் மூலமாகத் திகழ்வது பிரணவம் என்னும் ஓங்காரமே. ஓங்கார மூல ஒலியிலிருந்தே இந்த உலகம் யாவும் தோன்றுவனவாயின. ஞானிகள் உலகின் தோற்றமும், இயக்கமும் ஓங்காரத்தினாலேயே பெறுகின்றன என்பதைக் கண்டுணர்ந்தனர்.

"ஓங்காரத்தி லுதித்த துலகெலாம்
ஓங்காரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்காரத்தி லொடுங்கு முலகெலாம்
ஓங்காரத்தி லுறுதி சிவாயவே"

(நற்சிந்தனை)

நாதம் என்னும் தத்துவத்தை உணர்ந்த ஞானிகள் ஊங்கார வடிவை இயற்கை யாகவே பொருந்தும் யானைமுகம் உடையதாகவே உருவகம் செய்து, சகலருக்கு முணர்த்தினர். திருக்கோயில்களில் அமைந்த வடிவங்களை வழிப்படுதலினும் மந்திரங்களை இறைவனது வடிவமாகக் கொண்டு வழிபடுதலே சிறந்ததென்பர். மந்திரங்களுள் விநாயகர் பிரணவ மந்திர வடிவினர் என்க. கடவுளுக்குச் சொருப நிலையில் எவ்வித உருவமுமில்லை. ஆயினும் உயிர்கள் தம்மை வழிபட்டு, உய்யும் பொருட்டு பல வடிவங்களாகக் காலம், இடம் ஆகிய சூழ்நிலைகளுக்கேற்ப அவர், ஞானிகளின் உணர்வுகளில் தோன்றி நின்று அருளுகின்றார். இதனைச் சாத்திரங்கள் 'தடத்தலக்கணம்' என்று கூறும்.

வழிபடும் அடியவர்களின் இடர்களைக்களைதற்குச் சிறப்பாயமைந்த மூர்த்தமே கணபதி வடிவாகும். அவர் தம்மை வழிபடுவோர்க்கு இடையூற்றைப் போக்குதல் அறக்கருணை அல்லார்க்கு இடையூற்றை ஆக்குதல் மறக்கருணை, அதனால் விநாயகருக்கு 'விக்கிநேசுரர்' விக்கினராசர்' என்னும் திருப்பெயர்கள் உளவாயின. ஒரு செயலைத் தொடங்குங்கால் அஃது இடையூறின்றி இனிது முற்றுதற் பொருட்டு இறைவனை வணங்கித் தொடங்குதல் வேண்டும். அவ்விடத்தில் இறைவன் இடையூறு நீக்குபவனாயிருந்து தன்னை வணங்குவோர்க்கு அருள்புரிவான். இவ்வாறிருந்து அருள் செய்யும் நிலையே "விநாயகப் பெருமான்" எனப்படும் நிலை.

பிள்ளையாரின் திருவுருவங்கள், ஏறத்தாழ முப்பத்திரண்டு நிலைகளில் உள. மதுரை, திருச்செந்தூர், சிதம்பரம் ஆகிய தலங்களில் முக்குறுணி விநாயகர் மிகப் பெரிய திருவுருவங் கொண்டு விளங்குகின்றார். காஞ்சிபுரம் 'திருவோண காந்தன்தளி என்னும் தேவாரப் பாடல் பெற்ற கோயில்களில் கருவறை மண்டபத்து நுழைவாயிற் சுவரின் முகப்பிலிருக்கும். விநாயகர் திருவுருவத்தின் அருகே சென்று நம் செவியை அணுக வைத்து நின்றால் ஒருவகை ஓங்கார ஒலி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்வொலியைக்கேட்டு, மகிழ்ந்து, வியந்து, வணங்கிச் செல்கின்றனர். ஊர்களின் வாயில்களிலும், சக்திகளிலும் வீதியோரங்களில், தத்தமது வசதிக்கேற்ப, சிறிதாகவோ பெரிதாகவோ விநாயகர் ஆலயத்தை அமைத்து வழிபடுகின்றனர். சிலர் மண்ணினாலும், சாந்தினாலும் மற்றும் வசதியான மஞ்சள் போன்ற எப்பொருளினாலும் கணபதி உருவத்தை அமைத்து வழிபட்டு வருதல் பண்டு தொட்டே வழக்கமாகும். விநாயகப் பெருமானின் திருவுருவம் தத்துவமயமானது. அவரின் திருமுகம், முக்கண், மாலை முதலியன சிவபெருமானைக் குறிப்பன. இவரது திருவடிகள் ஞான சக்தியும், கிரியா சக்தியுமாகும். இவரது பேழை வயிற்றில் உலகமெல்லாம் அடங்கும். ஐந்து கரமும் ஐந்து தொழில்களைச் செய்யும். ஒவ்வொரு தெய்வ மூர்த்தத்திற்கும் வாகனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளது. ஒவ்வொரு வாகனமும் அதற்குரிய தெய் வத்தின் தனி மகிமையைக் குறிக்கும். விநாயகரது வாகனம் அதற்குரிய தெய்வத்தின் தனி மகிமையைக் குறிக்கும் விநாயகரது வாகனம் பெருச்சாளியாகும். பெருச்சாளியின் தத்துவப் பொருள் யாதெனில், பெரிய திற் பெரியதும், சிறியதிற் சிறியதுமான கோலங்கள் யாவிலும் பெரிது. சிறிதெனும் நிறைந்திருக்கும் பூரண பொருளின் உண்மையையே இத்தத்துவம் தெரி விக்கும்.

இறைவனை உள்ளன்போடு ஏத்தினால் அவன் அருள்புரிவான். கணபதியை வலம் வருதல், தேங் காய்கள் எறிதல், உடைத்தல், அபிடேகம், அலங் காரம் முதலியன செய்தல் ஆகிய பலவகை முறைக ளில் வழிபாடு நிகழ்த்துகிறார்கள்.

விக்கினேசுவரரை வழிபடும்போது வாழை, மா, பலா முதலிய கனி வகைகளும், தேங்காய் கருப் பங்கட்டி, மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், கடலை முதலிய சிற்றுண்டிகளும் வகைவகையாகப் படைத்து வழிபட வேண்டும். ஏனெனில் என்றும் பிள்ளையாராய் (சிறுவராய்) இருப்பதனாலாகும். இவ் வண்ணம் படைக்கும் பொருள்கள் நம் சிவ போதத் தையும், இவற்றை உண்டு அவர் பொழியும் மதநீர் அவர் எமக்குச் செய்யும், கருணையையும் விளக்கும். விநாயகருக்கு மலர்களைவிட அருகம்புல்லே விருப் பத்தைத் தருவதாகும். இதன் பெருமை, விநாயக புராணத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. இரு கைக ளினாலும் தலையிற் குட்டிக் கொள்ளுதல், இரு கைகளையும் மாற்றி, இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் இடுதலும் இப்பெருமான் முன் செய்யும் சிறப்பு வழிபாடாகும் பிள்ளையார் வழிபாட்டை எளிதாக செய்யலாம். மண்ணையோ, சாணத்தையோ பிடித்துப் பிள்ளையாராக்கி அறுகம் புல்லோ, பச்சிலையோ சாத்தி, எந்த இடத்திலும் வழிபடலாம். விநாயகர் வழிபாடு பயன்மிக்கதொன் றாகும். 'கணபதி பூசை கைமேற் பலன்'' என்பது பழமொழி.

விநாயகப் பெருமானை மெய்யன்போடு வணங்கி, இட்ட சித்திகளைப் பெற்றவர்கள் பலர், பிரமன், விஷ்ணு, தக்கன், இந்திரன், நளன், சண்முகர், மன்மதன், ஆதிசேடன், சந்திரன், இராவணன், அகத் தியர், ஔவையார், கபிலர், நம்பியாண்டார் நம்பி முதலாய அருளாளர்கள் விநாயகர் அருள் பெற்றோ ராவர் இவ்வருளாளர்களின் வரலாறுகளினாலும், நம் நிதிய வழிபாடுளினாலும், விநாயகப் பெருமானின் திருவருளை நாம் அறிந்து உணரலாம். விநாயகப் புராணத்திற்கேற்ப தோப்புக்கரணம் இடுதல் விநாயக ருக்குரிய சிறப்பு வழிபாடாகும். விநாயகரை நாடோறும் வழிபடுகின்றவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக் கும். தீமைகள் யாவும் நீங்கும். நீண்ட வாழ்வுடன் நோயின்மையும் எண்ணிய எண்ணியாங்கு எய்தலும் கைகூடும். கல்வியும், ஞானமும் வீடுபேறு கிடைக்கும்.

**அ. செல்லத்துரை (தலைவர்)**
**சிவதொண்டன் நிலையம்**
**யாழ்ப்பாணம்**

## விநாயகர் விரும்பும் வன்னி இலை

வன்னி வெப்பம் தணிக்கும் மூலிகையாகும். சூரியகாந்தக் கல்லோடு சூரிய வெப்பம் கலந்தவுடன் தீ வெளிப்படுவது போல வன்னிக்கட்டையினின்று நெருப்பு வெளிப்படுவதாலும் ஓமம் முதலிய நற்காரியங்களுக்கு பயன்படும் வன்னித்தழை விநாயகருக்கு உகந்ததாயிற்று. வன்னி நெருப்பு வடிவாதலின் நெருப்பினைச் சார்ந்த பொருட்கள் தூய்மையுறுதல் போல வன்னி மரத்தையும் இலையையும் தீண்டிய அன்பர்களுடைய பாவம் அகல வேண்டும் என்ற திரு வுளக் குறிப்போடு விநாயகர் வன்னியடியில் எழுந்தருளியிருந்து வன்னித் தழையைத் தமக்கு உகந்த அர்ச்சினைப் பொருளாக ஏற்றுக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானவிநாயகர் ஆலய வரலாறு

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"

- திருமந்திரம்

திருமூலநாயனாருடைய திருமந்திரத்திலே இறைவன் உறையும் இடம் பற்றி மிகத் தெளிவாக்க கூறப்பட்டுள்ளது. இறைவன் சோதி வடிவானவன். அந்தச் சோதியுடன் ஆன்மா கலந்து பேரின்பமடைதலே இந்த மானிடப்பிறவியின் நோக்கமாகும். இறைவனை நித்தமும் சிந்தித்தாலே அவனது கருணையைப் பெறமுடியும். இறைவன் உறைகின்ற இடமாகிய உள்ளத்தை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அழுக்கான இடத்திலே அவன் உறையமாட்டான். எனவேதான் உள்ளமாகிய பெருங் கோயிலை, ஒழுக்கம், அன்பு, கருணை, தியானம், உண்மை போன்றவற்றை உள்ளத்திலே சேர்ப்பதன் மூலம் உள்ளம் தூய்மைப்படுகின்றது. அப்போது இறைவன் உள்ளத்தில் குடியிருப்பான்.

உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின்..................

என திருமூலர் எமக்கு அறிவுரை தருகின்றார். சாதாரண மனிதர்களும் இவ்வரிய கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும்.

இறைவனைத் திடீரென அணுகமுடியாது. படிமுறைத்தன்மை அதற்குத் தேவை. மனம் ஒருநிலைப் படாமல் இறைவனைக் காண்பது நடவாத காரியமாகும். மனதை ஒருநிலைப் படுத்தும் இடமாகத்தான் ஆலயம் விளங்குகின்றது. அவ்வாலயத்தைத் தூய்மையாக வைத்திருப்பது மட்டுமல்லாமல் காலந்தவறாது தரிசிக்கவும் வேண்டும். காலம் தவறாது தரிசிப்பதற்கு உள்ளத்திற்கு பயிற்சி கொடுக்க வேண்டும். அந்தப் பயிற்சியும் சிறு வயதிலிருந்து கொடுப்பது உத்தமமான காரியமாகும். அதற்காகத்தான் எமது முன்னோர்கள் ஊர்கள் தோறும் ஆலயம் அமைத்தனர். இந்த நல்ல எண்ணத்துடன் தான் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிலும் ஞான வினாயகர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்திற்கு ஒரு வரலாறு உண்டு. கலாசாலையினுள் வாழும் மக்களுக்கு மட்டுமன்றி சகலருக்கும் ஞானத்தை தருபவராக ஞான வினாயகர் விளங்குகின்றார். 1946ஆம் ஆண்டு இந்தக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட போது ஒரு கோயிலின் தேவை உணரப்பட்டது. 1950ஆம் ஆண்டுக்குப்பின் புதிய கலாசாலை மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்ட போதும் இந்த எண்ணம் மாணவர்களது உள்ளத்திலே மீண்டும் உதித்தது. அது செயலுருப் பெறுவதற்கு காலம் கனியவில்லை என்றே கூறவேண்டும். அக் காலத்தில் மாணவர்கள் பிரார்த்தனை செய்வதற்கு ஒரு மண்டபத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டனர். காலை, மாலைப் பொழுதுகளில் இந்த மண்டபத்திலே அமர்ந்து கூட்டுப்பிரார்த்தனை செய்து இறைவனை வேண்டிக் கொண்டனர்.

1960, 1961ஆம் ஆண்டுகளில் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் கோயிலின் அவசியம் பற்றி மேலும் உணர்ந்தனர். அக்காலத்தில் விரிவுரையாளர்களாக இருந்த பண்டிதர் பூபாலப் பிள்ளை, திருமதி கந்தையா கங்கேஸ்வரி, திரு திருஞானசம்பந்தர் ஆகியோரது ஊக்குவிப்பு ஓரளவு செயலுருக் கொள்வதற்கு வழிகோலியது எனலாம். ஆயினும் இறைவனது திருவருள் கூடாமையினால் கோயில் அமைக்கும் பணி ஒத்திவைக்கப்பட்டது. மாணவர்களது தொகை மிகச் சிறியதாக இருந்த காரணத்தினால் இது கைகூடவில்லை எனலாம். ஆயினும் கோயில் திருப்பணிக்காக குறைந்தளவு பணம் வசூலிக்கப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டது. இப்பணம் பிற்காலத்தில் கோயில் திருப்பணிக்காக தக்க சமயத்தில் பயன்படச் செய்த பெருமை மக்கள் வங்கியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரையே சாரும்.

1962ம் ஆண்டுக்குப் பிற்பாடு ஆசிரியர் பயிற்சியைத் தொடர வந்த மாணவர்கள் தற்காலிகமாக ஒரு மண்டபத்தை பிரார்த்தனைக் கூடமாக மாற்றியமைத்து வழிபட்டு வந்தனர். ஆசிரியர் கலாசாலையில் மிகமுக்கியமான சமய நிகழ்ச்சிகள் இடம் பெறுவது வழமையாகும். சிவராத்திரி விழா, குருபூசை, சரஸ்வதி பூசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்று வந்துள்ளன. இவற்றை சிறப்பாக நடத்துவதற்கு கோயிற்றலமே சிறந்த இடமாக கொள்ளப்படும். இந்த வசதி ஆசிரியர் கலாசாலையிலே இல்லாத காரணத்தினால மண்டபங்கள் தான் கோயில் போல அமைத்து வந்துள்ளன. இக்கலாசாலையிலே விரிவுரையாளர்களாக இருந்த பண்டிதர் பூபாலப்பிள்ளை, திருமதி கந்தையா கங்கேஸ்வரி ஆகிய இருவரது வழிகாட்டுதலின் பேரில் ஆசிரிய மாணவர்கள் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்திற்கும் சென்று வழிபட்டு வந்தனர். இது பலவருடங்களாக நடைபெற்று வந்த நிகழ்வாகும்.

1980,1981 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் கலா சாலையினுள் கோயில் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் மேலும் உக்கிரமடைந்தது ஆயினும் கோயிற்பணி தொடங்கவே இல்லை. அக்காலத்தில் அதிபர்களாக இருந்தவர்களது உள்ளத்திலே இவ் வெண்ணம் தீவிரமாக முளைத்த போதிலும் செய லுருப் பெறவில்லை. 1986ம் ஆண்டில் இக்கலாசாலை யில் மிகக் கூடுதலன மாணவர்கள் அனுமதிக்கப்பட் டனர். அப்போதிருந்த அதிபர் திரு க. கனகசூரியம் அவர்களும் விரிவுரையாளர்களும் இந்து மன்றத்தி னரும் காட்டிய ஆர்வம் மிக முக்கியமானதாகும்.

பயிற்சி ஆசிரியர்கள் மாதந்தோறும் பண உதவி செய்து பணத்தை சேகரித்துக் கொண்டனர். பணப்பற்றாக்குறை நிலவிய போது அதிபர், விரிவுரை யாளர்களும் பணவுதவி செய்தனர். சேகரித்த பணத் தைக் கொண்டு இந்து மன்றத்தினர் கோயில் அமைக் கும் திருப்பணிக்கு ஆயத்தமாகினர்.

தானே தனக்குப் பகைவனும் நட்டா னுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனுமாமே.

திருமூலர் கூறுகின்ற வார்த்தை ஒப்புவமையில் லாதது. தனக்குத்தானே பகைவனும் நண்பனும். நவீன உளவியல் கருத்தும் இதையே கூறுகின்றது. எண்ணத்தின் வழியே வாழ்க்கை ஓடுகின்றது. உயர்ந்த எண்ணம் உயர்ந்த வாழ்க்கையைத் தருகின் றது. தாழ்ந்த எண்ணம் தாழ்ந்த வாழ்க்கையைத் தருகின்றது. இதனை மிக அழகாகத் திருமூலரும் தனக்குத்தானே பகைவனும் நண்பனும் எனக்கூறு வதில் அறிகின்றோம். எமது அன்றைய மாணவ ஆசிரியர்கள் உயர்ந்த எண்ணத்துடன் செய்த காரியம் இன்றும் போற்றப்படுகின்றது. அவர்களது வாழ்வும் உயர்ந்து காணப்படுகின்றது. இன்னுமொரு வார்த்தை யையும் அவதானத்தில் கொள்ள வேண்டியது அவசியமான காரியமாகும். இம்மை, மறுமைப் பயன்க ளைப் பெற்றுக் கொள்வதும் அவனேதான். கோயில் அமைத்து மக்களுக்கு திருப்பணி செய்வது. இம்மைக் கும் மறுமைக்கும் உரமூட்டுவதாக அமையும். தன்னு டைய கருமங்களுக்கு தானே பொறுப்பு, இன்னொருவ ரால் அது வந்தடைவதல்ல. எனத் திருமூலர் கூறிய வார்த்தையோடு ஒப்பிடக்கூடியது கணியன்பூங்குன்றார் செய்த கவிதையாகும். **தீதும் நன்று பிறந்தவாரா** என்பதுவே அந்த வார்த்தையாகும். 1986ஆம் ஆண்டு கல்வி பயின்ற மாணவர்கள் செயற்கரிய செயலாகிய கோயிற் திருப்பணியைச் செய்வதற்கு அடித்தளமிட்டுச் சென்றனர். இறைவன் எப்படிப்பட்டவர் என்பதை திரு மூலர் மீண்டும் கூறுகின்றார்.

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணை துணையாமே.

இறைவனை நெருங்குவது மிகவும் இலகுவான காரியம். அவன் மீது அன்பு கொள்ளுதலே அதற்கான வழியாகும். அன்பும் சிவமும் இரண்டென்பார் அறி விலார் எனத் திருமந்திரம் கூறுகின்றது. அன்புமயமான ஈசன் தனது அடியார்களுக்கு அன்பைச் சொரிகின் றான். இங்கும் கோயில் அமைத்துக் கொடுத்த எமது ஆசிரியர் குழாத்திற்கு தனது அன்பைப் பொழிகின் றான்.

இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகருக்கு ஒரு நாமம் தேட நாம் முனைந்த போது அவன் அருளாலே கவிஞர் திமிலைத்திமலனூடாக "**ஞான விநாயகன**" முன்மொழியப்பட்டான். 1987 ஆம் ஆண்டு ஞான வினாயகர் விக்கிரத்தை எடுப்பதற்காக அப்போதிருந்த அதிபரும் நானும் இந்து மன்றப்பொரு ளாளரும் கொழும்புக்குச் சென்ற வேளையில் எதுவிதமான பிரச்சினையுமின்றி ஞானவினாயகர் விக்கிரகம் எமக்குக் கிடைத்தது. அதுமட்டுமல்லாது அதனை மட்டக்களப்பிற்கு கொண்டு வருவதற்குக் கூட எதுவித சிரமமும் நாம் அடையவில்லை. பதுளை ஆர். மோகன என்னும் மாணவர் அன்றையப் பொழுதை எங்களுடனேயே கழித்தார். அவர் இந்து மன்றப் பொருளாருமாவார்.

1986. 11. 03 ஆந்திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுவாமி ஜீவானந்தஜீ அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அக்காலத்தில் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த திரு. செ. இராசதுரையவர்கள் கோயில் மண்டபம் அமைப்பதற் கான நிதியையும், இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட மூல விக்கரகமான விநாயகர் சிலையையும் தந்துத வினார். இக்காலாசாலையில் பயின்ற கனடா பழைய மாணவர்களின் தொடர்பினாலும் நிதியுதவி பெறப் பட்டது. 1988 ஆம் ஆண்டு சேவை முன் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருந்த ஆசிரியர்களினாலும் நிதி உதவி பெறப்பட்டது. 'யூனிசெப்' நிறுவனமும் சர்வோ தயா இயக்கமும் நிதிஉதவி வழங்கின. மட்டக்களப்பு நகர் வாழ் பெரியோர்களும் நிதியுதவி அளித்தனர். மற்றும் பல பொதுமக்களின் உதவியுடன் ஞானவினா யகர் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 1988. 10. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திகதி திங்கட்கிழமை சப்தமி திதியும் புனர்பூச நடசத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப நேரத்தில் மகா கும்பாபிசேஷகம் செய்யப்பட்டது.

இவ்வாலய நிர்மாணிப்பில் முழுத்தொண்டாற்றிய வினாயகர் ஆலய நிர்மாணிப்புச் சபை தனது நோக்கம் நிறைவேறியது குறித்துப் பெருமகிழ்ச்சியெய்தியது.

1997ஆம் 1998 ஆம் ஆண்டு மாணவர்கள் தமது இந்து மன்றத்தினூடாக ஆலயத் திருத்த வேலைகள் பற்றி கலந்துரையாடினர். இது சம்பந்த மாக திட்டமொன்றை விடுத்து அதற்காக நடவடிக்கை களில் ஈடுபட்டனர். திருத்தவேலை 1998 ஆம் ஆண்டு நடைபெறுவதற்கான சாத்தியக்கூறு இடம்பெறவில்லை. 1998 ஆம் ஆண்டு மாணவர்களும் 1999 ஆண்டு மாணவர்களும் ஒருங்கு சேர்ந்து ஆலயப் புனருத்தா ரணசபையொன்றை நிறுவினர். அதனூடாக பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்றன. குறிப்பாக திரு.வி. லட்சுமி சுந்தரமவர்களின் விடாமுயற்சியுடனும் அதிபர், விரிவுரையாளர்களின் ஆர்வத்துடனும் இக்கைங்கரியம் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த அன்பர்களும் அடியார்களும், தாபனங்களும் பண உதவி செய்தனர். கேட்டபோது இல்லையென்று கூறாமல் தாராளமாக பண உதவி செய்த அன்பர்களுக்கு இறைவன் திருவருள் பாலிப்பாராக. ஆலய புனருத்தாரண சபைத் தலைவரான திரு. வே. மோனதாஸ் அவர்களும் செயலாளரான திரு.க.ரவீந்திரன் அவர்களும், பொருளா ளரான திரு.அ.முரளீதரன் அவர்களும் சகல மாண வர்களையும் தமது அன்பினால் வழிநடத்தி இப்புண் ணிய காரியத்தைச் செய்யத் தொடங்கினர். இன்னார் தான் என்றில்லாமல் இதில் பங்கு கொண்ட மாணவர் களை ஆலய புனருத்தாரண சபை என்றும் நினைவு கூருகின்றது.

ஆலயம் புனருத்தாரணம் செய்வதற்கு ஆலயம் பாலஸ்தாபனம் 1999-03-15 ஆந்திகதி செயப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டன. இந்த புனருத்தாபன வேலைகளுக்கு மூலகர்த்தாவாக விளங்கியவர் உப அதிபராவார். அவருடைய ஆலோசனையின் பேரில் நடராச சந்நிதி அமைக்கப்பட்டது. மடப்பள்ளி இல்லாத குறையைப் போக்குவதற்காக மடப் பள்ளி கட்டிட வேலையும் பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் மூசிக பலிபீடம் அமைக்கப்பட்டது. புதிய மண்டபத்திருத்த வேலை இடம் பெற்றது. மூசிக பலிபீடம் வவுனியாவி லிருந்து தருவிக்கப்பட்டது. இதற்கான எழுந்தருளி விக்கிரகங்கள் மட்டக்களப்பு முனைத்தீவிலிருந்து கொண்டுவரப்பட்டன. இந்த திருத்த வேலைகளுக்கான நிர்மாணப்பணிகள் சிறந்த கலைஞர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டன. கட்டிடக்கலைகலைஞர் திரு. ஞா. ஆனந்தராசா அவர்களும் வர்ணப்பூச்சுக் கலைஞர் ஆரையம்பதி ஜெகா அவர்களும் மிகவும் பக்தி சிரத்தையடன் இப்பணிகளைச் செய்தனர்.

சேதமடைந்த மின் கம்பிகள் அனைத்தும் புதிதாக மின்னிணைப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. கலாசாலை மாணவர்களே அவற்றையும் முன்னின்ற செய்தனர். சிறிய ஒரு திருத்த வேலைக்காக ஒழுங்கு செய்யப்பட்ட இக்காரியம் பெரிய கோயில் திருத்தப் பணியாக மாறியது. இருந்த போதிலும் திருத்த வேலை தொடங்கிய நாள் தொடக்கம் எதுவிதமான தடங்கலுமின்றி வேலைகள் மிக ஆர்வத்துடன் நடந்து முடிந்ததன. 1999-10-29 ஆந் திகதி கும்பாபிஷேக தினமாகக் குறிக்கப்பட்டது.

இச்சந்தர்பத்தில் ஞான விநாயகர் ஆலயத் திருத்தப்பணியை சிறப்புறச் செய்தற்கு முன்னின்று உழைத்த ஆலயப் பரிபாலனசபை, புனருத்தாரணசபை மற்றும் சகல மாணவர்களுக்கும் இறைவனது திருவ ருள் கிடைப்பதாக வேண்டிக் கொள்கின்றோம். இதில் அயராது உழைத்த மாணவர்களை ஊக்கப்படுத்திய திரு.வி. லட்சுமிசுந்தரமவர்களை என்னால் மறக்க முடியாது. அவர்களுக்கும் இறைவன் திருவருள் பாலிப்பதாக. இதுவரை காலமும் இக்காலாசாலையில் எதுவித இடைஞ்சலுமின்றி சகலரையும் காத்து அருள் புரிந்த ஞான வினாயகர் பாதாரவிந்தங்களைப் போற்றி நாம் அனைவரும் அவன் அருள் பெறுவோமாக.

**வ. கனகசிங்கம்,**
**(முன்னாள் அதிபர்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குடமுழுக்கு

ஈழத்துச் சைவக்கோயில்களுக்கு இது ஓர் குடமுழுக்குக் காலம் ஆகும். போர்க் கெடுதிகளி னாலே பழுது புகுந்த கோயில்களைப் பழுது தீரக் குடமுழுக்காட்டுதல் முறைமையாகின்றது. போர்க் கொடுமைகளாலே நிர்க்கதிக்குள்ளான குடிமக்கள் கடவுளே கதி என்று குடமுழுக்குக் கைங்கரியங்களில் பக்தி சிரத்தையுடன் ஈடுபடுகின்றனர். இக்கிரியைகள் தகைசான்ற சிவாசாரியார்களைக் கொண்டு பெருந் தொகையான பொருட்செலவில் பல நாட்கள் செய்யப் படுவதாம். ஆதலினாலே இக்கிரியைகளின் பொருளு ணர்ந்து வழிபாடாற்றுதல் நம்முன்னோர் கடனாம்.

குடுமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தி விரிவான கிரியைகளை உள்ளடக்கியதாம். அக்கிரியைகளில் முக்கியமானவை மேல்வருமாறு

01. தனபூசை
02. அனுக்ஞை
03. விக்னேஸ்வர பூசை
04. வாஸ்து சாந்தி
05. மிருத் சங்கிரகணம்
06. அங்குரார்ப்பணம்
07. ரக்ஷாபந்தனம்
08. கும்பஸ்தாபனம்
09. கலாகர்ஷணம்
10. யாகபூசை
11. அஷ்டபந்தனம்
12. ஸ்பரிசாகுதி
13. மகா கும்பாபிஷேகம்

## 01. தனபூசை:

இது குடமுழுக்கிற்கு உபயோகமாகும் தனம் பற்றியதாகும். இத்தனம் தரும வழியிற் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பது ஓரம்சம். இன்னோரம்சம் அத்தனத்தை சிவார்ப்பணம் செய்தல் வேண்டும் என்பது சிவார்ப்பணமாகச் செய்த அத்தனத்தைச் சிவானுக்கிரமாகப் பெற்றுக் குடமுழுக்குக் கைங்கரி யத்திற்கு உபயோகித்தலே இப்பூசையின் நோக்க மாகும். இதன் பொருட்டு தனத்தைச் சிவார்ப்பண மாக்கி, தனத்தின் ஒரு பகுதியை பட்டு விரித்த பொற்கலசத்தில் வைத்து பரமசிவார்ப்பணமாக ஆசாரி யார் கையிலே பிரார்த்தனையுடன் கொடுக்கப்படு கின்றது. ஆசாரியார் அதனைத் தெய்வத்தின் முன்னி லையில் வைத்து பூசனை செய்து சிவானுக்கிரமாகப் பெற்ற அருட் பிரசாதமாக அளிக்கின்றார்.

## 02. அனுக்ஞை

கும்பாபிடேகம் செய்யவிருக்கும் ஆசாரியர் எஜமானராக இருந்து நடாத்தித் தகுதி உள்ளவரெனச் சபையோர்களிடம் அனுமதி பெற்ற பின் இறைவனிட மும் இறைவியிடமும் அனுமதி பெறுவதான கிரியை அனுக்ஞை ஆகும் இக்கிரியை ஆசாரியரது தகைமை உயர்ந்தோர் அவையிலும் இறைவன் திரு முன்னிலை யிலும் கௌரவத்திற்குரியதாக இருத்தல் வேண்டும் என்பதை உட்பொருளாக உடையது. பெருமான சௌபாக்கியவஸ்து. ஆதலினால் இப்பெரிய கைங் கரியத்தை இயற்றும் ஆசாரியார் மந்திரம், பாவம், தியானம் ஆகியவற்றில் நிறைவினராயிருத்தல் வேண்டும்.

## 03. விக்கேஸ்வரபூசை

கும்பாபிடேக கருமம் விக்கினமின்றி இனிது முடிதற் பொருட்டு விக்கினங்களைப் போக்கும் "இடர் கடிகணபதியை" இறைஞ்சுதல் விக்னேஸ்வரபூசை.

## 04. வாஸ்துசாந்தி

வாஸ்துபுருஷன் எனப்படும் ஆசானின் தொந் தரவு இல்லாதிருக்கும் பொருட்டு செய்யப்படுவது வாஸ்துசாந்தி இதன் பொருட்டு வாஸ்துவைக் காவல் செய்யுமாறு பிரமன் முதலான தேவர்களைப் பூசை, பலி என்பவற்றால் திருப்தி செய்வது வாஸ்து சாந்தி யாகும்

## 05. மிருத் சங்கிரகணம்

அங்குரார்ப்பணம் செய்தற் பொருட்டு பூமியையும், பூமிக்கு காவலான் இந்திரன் முதலான திக்குப் பாலர்களையும் தலைவனான பிரமனையும் பிரார்த் தித்து மண்ணை வெட்டி எடுத்தல் மிருத் சங்கிரகணம் ஆகும். வெட்டிய தோஷம் நீங்க பள்ளத்தில் அபிடேகம் செய்து பூசித்தல் வேண்டும். எங்கும் ஈசன் நிறைந்துள்ளான். (ஈஸாவாஸ்யம் இதம் சாவம்) எனும் உண்மையின் அடிப்படையை பிரவாஹ இக்கிரியை யில் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. அங்குரார்ப்பணம்

முளைப்பாலிகைகளில் பால் கலந்த தானியங்களை மந்திரபூர்வமாகத் தெளிந்து முளைக்கச் செய்வது அங்குரார்ப்பணமாகும். வித்துக்கள் முறையாகவும், பசுமையாகவும் முளைத்தல் கிரியை செம்மையான முறையில் நடைபெறுவதற்கு சான்றாக அமையும்.

## 07. ரக்ஷாபந்தனம்

ஆச்சாரியாருக்கு தீட்டு முதலிய தோஷங் கள் அணுகாமல் பாதுகாத்தற் பொருட்டு ரக்ஷா பந்தனம் செய்யப்படுகின்றது. இக்காப்பினாலே கிரியைகளுக்கு குந்தகம் நேராமல் பேணப்படுகிறது. (இக்கிரியைகளை கும்பாபிடேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் எனக் கூறலாம். இக்கிரியைகளில் வற்புறுத்தப்படும் அம்சங்களை நோக்கும் போது இவை மிக்க விழிப்புடனும், பயபக்தியுடனும், கௌரவத்துடனும் செய்யப்படுவன என்பது தெரிய வரும்)

## 08. கும்பஸ்தாபனம்

மூலமூர்த்தி ஆதிய தேவர்களை அவர் தம் தாபனங்களினின்றும் யாகசாலைக்கு எழுந்தருளுவித்து கும்பங்களில் ஆகர்ஷனம் செய்தல் கும்பஸ் தாபனம் இறைவன் எழுந்தருளியிருக்கும் கும்பம் இறைவடிவமாகவே கொள்ளப்படும். குடம் தசையாகவும், குடத்து நீர் இரத்தமாகவும் குடத்துக்குள் இடப்பட்ட கூர்ச்சரம் எனும் தர்ப்பைக்கட்டு நாடியாகவும் கும்ப இரத்தினங்கள் சுக்கிலமாகவும், கொள்ளப்படுகின்றது குடத்தின் மேல் நெருக்கமாக சுற்றப்பெற்றிருக்கும் முப்புரி நூல் நரம்பாகும். கும்பத்தை போர்த்திய வஸ்திரமே தோல். உச்சரிக்கப்படும் மந்திரம் பிராணன். குடத்தின் மேலுள்ள தேங்காய் சிரம், தேங்காயின் மேல் விரிந்துள்ள கூர்ச்சரம் தலைமயிர், மாவிலை ஜடாபாரம் இவ்வணணம் கும்பமானது இறைவனாகவே கொள்ளப்படும்.

## 09. கலாகர்ஷணம்

கும்பத்தாபனம் செய்தது முதல் கும்பாபிடேகம் செய்யும் வரையான காலமாகவும் கும்பத்திலே இறைவனை நிலைக்கச் செய்தல் கலாகர்ஷணம் ஆகும்.

## 10. யாகபூசை

யாகசாலையிலே கும்பத்தில் எழுந்தருளியிருக்கும் மூலவருக்கும் பரிவார தேவர்களுக்கும் காலம் தவறாது செய்யும் பூசனை யாக பூசை ஆகும். யாகசாலையானது சிவகும்பங்கள் ஹோமகுண்டம் வேதிகைகள் என்பவற்றாலும் ஆன்மசுத்தி உடைய ஆசாரியர்களாலும் அட்டமூர்த்தியான இறைவன் அமர்ந்திருக்கும் இடமாகவே அமைகிறது. யாகசாலை நிலம், கும்பதீர்த்தம் நீர், ஓமாக்கினி தீ, யாகசாலையில் ஒலிக்கும் மந்திர ஒலி வாயு, இடையே உள்ள வெளி ஆகாயம், காலையில் நிகழும் சூரிய வணக்கம் சூரியன், மாலையில் நிகழும் சந்திர வணக்கம் சந்திரன், ஆன்ம சுத்தரான அசாரியர்கள் இயமானன் என்றிவற்றால் **"நிலம், நீர், நெருப்பு உயிர் நீள்விசும்பு நிலா பகலோன் புலனாய மைந்தனோ டெண்வகையாய் புணர்ந்து நின்றான."** எனக் தோத்திரம் செய்தற்கிடாமாக யாகசாலை அமைகிறது.

## 11 அஷ்டபந்தனம்

மூலவர் ஆதிய மூர்த்திகளின் பிம்பங்களை அவரவர் தானங்களிலே உள்ள பீடங்களில் பலவருடங்களுக்கு அசையாதிருக்கச் செய்யக்கூடிய அற்புத சக்தி வாய்ந்த மருந்திட்டுத் தாபனம் செய்தல் அஷ்டபந்தனம் ஆகும்.

## 12. ஸ்பரிசாருதி

இது நாடிச்சந்தானம் (தங்கக் கம்பி முதலானவைகள்) மூலம் யாகசாலையில் செய்யப்பெற்ற ஹோமங்களையும் தத்துவங்களையும் தத்துவத்தின் அதிபர்களையும் மூலஸ்தானங்களில் சேர்ப்பதாகும். ஆசாரியர்கள் ஆன்ம சுத்தியுடனும் மந்திரசுத்தியுடனும், முத்திரைகளுடனும் உயிரை எழுப்பி உருவேறச் செய்யும் இக்கிரியையாலே திருவேறிய தேவர்கள் தாமாகவே தத்தம் தானங்களுக்கு எழுந்தருளும் அற்புதங்கள் இன்றும் ஆங்காங்கே நிகழுகின்றன.

## 13. மகாகும்பாபிஷேகம்

கும்பத்திலுள்ள நீர் மந்திரசாந்நித்தியம் பெற்றதாகும். ஆசாரியன் சிவோகம்பாவனை மூல மந்திர செபம் ஆகியவற்றாலே சிவலிங்கதிலுள்ள பிரசாத கலைகளையும், ஆறு அத்துவாக்களையும் ஆன்மாக்களையும், வித்தியாத்துவம், சிவதத்துவம் எனும் முப்பத்தாறு தத்துவங்களையம கும்பநீரிலே ஆகர்ஷணம் செய்துள்ளான். அவ்வாறு ஆகர்ஷணம் செய்யப் பெற்ற மந்திர சாந்நித்தியம் உடைய நீரே சூக்குமருபமான மூலவராகிய தேவர்களுக்கும், தூலருபமான தூபிக்கும் முழுக்காட்டப்படுகின்றது. மந்திர பூர்வமான தெய்வசக்திகளை மூல பிம்பங்களில் சேரும் படி செய்தலே குடமுழுக்கினது தத்துவப் பொருளாகும்.

**திரு. இலட்சுமணன் - நாகலிங்கம்**
**விடுகையாண்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ் செய்ம் மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே 1

ஈண்டு செஞ்சடையாகத் துளிசரோ
மூண்டகார்முகிலின் முறிக் கண்டரோ
ஆண்டு கொண்ட நீரேயருள் செய்திடும்
நீண்டமாக் கதவின் வலி நீக்குமே 2

அட்ட மூர்த்தியதாகிய வப்பரோ
துட்டர் வான் புரஞ்சுட்ட சுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரியவான் புரஞ்சுட்ட சுவண்டரோ
விரிகொள்கோவணவாடை வீருத்தரோ
பெரிய வான் கதவம் பிரிவிக்கவே 4

மூலையினிடிருக்கும் மறைக்காடரோ
கலைகள் வந்திறைஞ்சுங் கழலேத்தரோ
விலையின் மாமணி வண்ணவுருவரோ
தொலை விலாக் கதவந் துணை நீக்குமே 5

பூக்குந் தாழை புறணியரு கெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங்காண் பரியீரடி கேளுமே
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே 6

வெந்த வெண் பொடிப்பூசும் விகிர்தரோ
அந்த மில்லியணி மறைக்காடரோ
எந்தை நியடியார் வந்திறைஞ்சிட
இந்தமாக் கதவம் பிணி நீக்குமே 7

ஆறு சூடும் மணி மறைக்காடரோ
கூறு மாதுமைக்கீந்த குழகரோ
ஏற தேறிய வெம் பெருமானிந்த
மாறிலாக் கதவம் வலி நீக்குமே 8

சுன்ன வெண் பொடிப் பூசுஞ்வண்டரோ
பண்ணியேறு கந்தேறும் பரமரோ
அண்ணலாதியணி மறைக் காடரோ
திண்ணமாக்கதவந் திறப்பிம்மினே 9

அரக்கனை விரலாலடர்திட்ட நீர்
இரக்க மொன்றிலீ ரெம் பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ் மறைக் காடரோ
சரக்க விக்க தவந்திறப் பிம்மினே 10

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காட்டிலே பூட்டப்பட்டிருந்த திருக்கதவம் திறக்கும்படி திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட்ட இப் பதிகமானது ஆலய குடமுழுக்கு நாட்களில் பாடுவதற்கு மிகப் பொருத்தமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் தோற்றம் பற்றிய புராணங்களும் அவை உணர்த்தும் தத்துவங்களும்

இன்னதன்மையன் இவனென எவரும் இன்னும் இசைக்க இயலா இயல்பினன் இறைவன். இச்சொற்பதங் கடந்த அப்பனை இவ்வடிவினன், இவ்வண்ணத்தன் என்று எவ்வாறு கூறுவது? ஆயினும் வடிவமில்லாத இவ்விறைவனே பல பல வடிவங்களையும் கொண்டுள்ளான். இவ்வண்ணம் வடிவமில்லாத இறைவன் பல பல வடிவங்கள் கொள்வதன் இரகசியத்தை ஓதி அறிந்தவர் ஒருவரும் இலர். ஆனால் அருள் கொண்டறிந்த அருளாளரோ அநேகருளர். அவர்கள் பல பல வேடங் கொள்ளும் பரநாரிபாகர், காண்பல வேடர் என்றெல்லாம் நாம் அறிந்ததைக் கூறியுள்ளனர். அத்தகைய வேடங்களுள் ஒன்றே சொற்பதங்கடந்த துரிய மெய் ஞானம் கொண்ட அற்புதக் களிற்று வேடம்.

விநாயப் பெருமானது அருள்வடிவத்தின் விசேடம் அப்பெருமான் கொண்ட யானைமுகமாகும். யானை முகத்தவராக அவர் கொண்ட வடிவம் பற்றிய கதைகள் பலவாக உள்ளன. அக்கதைகளிலே சில மேல் வருமாறு:-

**சிவபுராணம்**

உலக மாதாவாகிய உமாதேவி தாமும் ஒரு பிள்ளையை பெற்றுக் கொஞ்சி குலாவ வேண்டுமென எண்ணினார். உடனே மண்ணினால் உரு சமைத்தார். அதற்கு உயிர் கொடுத்து தன் மடியில் வைத்து இன்புறுவதை கவனித்த சிவன் அவ்வண்ணமே திருநோக்கம் செய்து புதல்வப் பேற்றைக் கொண்டாட சகல தேவர்களையும் அழைப்பித்தார். அத்தருணம் சனியனும் வந்திருந்தான். அவன் பார்வை அக்குழந்தையின் மேல் விழுந்தது. அதனால் அவன் தலை அறுபட்டுப் போய்விட்டது. அன்னை வருந்தியதைக் கண்ட சிவன் பூதகணங்களைப் பார்த்து வடக்கே சென்று முதல் காணும் விலங்கின் தலையைக் கொண்டு வாருங்கள் என்று கூற, அவர்களும் அவ்வாறே ஒரு யானைத் தலையைக் கொண்டு வர சிவன் அதனைப் பொருத்தி குழந்தையை உயிர்ப்பித்தார் என்றும் கூறப்படுகிறது.

**காஞ்சிப் புராணம்**

திருக்கைலாயத்தில் சிவனும் உமையும் "மந்திர சாலா" எனும் பூஞ்சோலைச் சித்திர மண்டபத்துக்குச் சென்றனர். அங்கே பிரணவம் எழுதப்பட்டிருந்தது இருவரும் அதனையே உற்று நோக்கினர். பிரணவமாக அது பிரிந்து இறைவன் எழுத்தாகிய "அகரம் களிறாகவும்" அம்மை எழுத்தாகிய "உகரம் பிடியாகவும்" ஆயிற்று. அவை இரண்டும் கூடி விநாயகர் தோன்றினார் எனக் கூறுகிறது.

**கணபதி உபநிடதம்**

சிவன் குளிப்பதற்காக வைரவரை காவல் வைத்திருப்பது போல், சக்தி குளிப்பதற்கு தம் குழந்தையை காவல் வைத்திருந்த ஒரு சமயம் சிவன், சக்தி குளிக்கும் இடத்திற்கு நுழைய முயலும் வேளையில் காவலாக இருந்த பிள்ளைக்கும் சிவனுக்கும் இடையில் போர் நிகழ்கின்றது. (தம்மை யார், யார் என்று அறியாமல்) இப்போரில் காவலுக்கிருந்த பிள்ளையின் தலை வெட்டப்படுகிறது. பின் சக்தியால் அது தனது மைந்தன் என அறிந்த சிவன் தேவர்களை நோக்கி வடதிசை நோக்கி படுத்திருக்கும் தலையைக் கொண்டு வர பணிக்கின்றார். வடதிசையில் சென்று தேடி ஓய்ந்த தேவர்கள் இறுதியாக யானை படுத்திருப்பதைக் கண்டு அதன் தலையைக் கொண்டு வந்து சிவனின் மைந்தனுக்கு பொருத்தி அவரை யானை முகனாக கொண்டாடியதாக கூறப்படுகிறது.

இக்கதைகள் பலவாகவுள்ளமையொன்றே இவையெல்லாம் புனைகதைகளென்பதற்குத் தக்க சான்றாகும். இப்புனைக்கதைகளிலே அற்பசுக விடயங்களும். அத்துணை விவேகமில்லாத வேடிக்கைகளும் விரவியுள்ளன. அத்துடன் உயர்வறவுயர்ந்த தெய்வநலத்தை மனித அச்சில் வடித்துக் காட்டுவனவாயுமுள்ளன. இவற்றை நோக்க இவை கொச்சைமாக்களுக்கு ஒருவாறு உண்மையை உணர்த்துவதற்காகப் புனையப்பட்டவை எனக் கொள்வது பொருந்துவதே. வெள்ளையுள்ளத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான இம்மக்கள் நம்பிக்கைப் பலத்தால் இக்கதை களுடே உண்மையை உணர்த்தலும் கூடும். ஆயினும் வாதியரான பகுத்தறிவாளர் இக்கதைகளைக் கொண்டு அழுக்குருண்டை, விலங்குப்பிள்ளை என்றெல்லாம் பரிகசித்தலும் இயல்பானதே. மெய்யறிவாளரோ புனைவியலான அம்சங்களை எல்லாம் பொருட்படுத்தாது அவற்றின் உள்ளார்ந்த மெய்ப்பொருளையே கொள்வர். இம்மெய்ப்பொருள் மேல்வருமாறு:-

உலகம் தோன்றி நிலைத்து ஒடுங்குதற்கு ஆதாரமாய் இருப்பது நாததத்துவமாகும். இந்த நாததத்துவம் ஓங்காரம் எனவும் வழங்கும்.

"ஓங்காரத்தில் உதித்த உலகெலாம்
ஓங்காரத்தில் நிலைத்த உலகெலாம்
ஓங்காரத்தில் ஒடுங்கும் உலகெலாம்"

என உணர்ந்தோர் கூறுவர். இந்த ஓங்காரம் திறவோர் காட்சியில் யானை முகம் கடவுளாகத் தோன்றியது. ஆதலாலே திறவோர் "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" எனவும் "ஓங்காரருபன்" என்வும் போற்றினர். இவ்வாறு நாத தத்துவம் யானைமுகக் கடவுளாகத் தோன்றியதன் இயைபை ஒருவாறு அறிவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். பெரிதாம் தன்மை, திருவாம் சிறப்பு, மங்கலம் ஆதிய இயல்புகள் யானையிடம் உள் என. அத்துடன் யானையின் முகஅமைப்பு தேவநாகரி, தமிழ் ஆதிய தெய்வ மொழிகளிலுள்ள 341 ஓம் வரிவடிவங்களைப் பெரிதும் ஒத்தது. இவற்றால் பிரணவப் பொருள் யானைமுகக் கடவுளாகத் தோன்றியதில் ஒரு கலைவண்ணத்தைக் கண்டு நயந்தனர் பெரியோர்.

இனி, நாததத்துவத்துக்கு முதலாயுள்ளது சக்தி தத்துவமாகும். சத்தி தத்துவம், சிவதத்துவத்துள் ஒடுக்கமாகும். சிவசக்தி தத்துவங்களுள் ஒடுங்கியிருந்த நாததத்துவத்தின் வெளிப்பாடே உமாதேவியார் பிடியுருக்கொள்ள சிவபிரான் கரியுருக்கொண்டு விநாயகப் பெருமான் அவதரிக்க அருளியமையாம். சம்பந்தப்பிள்ளையாரின்

"பிடியதனுவுமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

எனும் தமிழ் மறையின் மறைபொருள் இதுவே. சம்பந்தப்பிள்ளையாரது மறைமொழியிலுள்ள இந்த உண்மை வேதத்திருநூலை நன்கு கற்ற மேற்கு நாட்டுப் பாதிரியார் ஒருவரது உள்ளத்திலும் தோன்றியது. Reverend H. Heras. S.J எனப்படும் அப்பாதிரியார் "**பரம்பொருள் தனக்குத் தானே ஆற்றலை (அதாவது ஞான சக்தியை) உலகம் தொழிற்படுவதற்காகப் படைத்துக் கொண்டது. அம்முதற்படைப்பு வாக்கு. அதன் முதல் நிலைபிரணவம். அது பெற்ற காட்சி உரு கணபதி வடிவம்**" எனக் கூறினார். இக்கூற்றுக்கு ஆதாரமாக "தேவர்கள் பிறப்பதற்கு முன்பே பிரமத்தினின்றும் வாக்குத் தோன்றிது. அதன் முதனிலையே பிரணவம்" என்ற கடோப நிஷத்தையும் கையாண்டிருக்கிறார்.

எமது சைவ முதற் குரவர் கூறியதும், மற்றைச் சமய குரவரால் மதிக்கப்படுவதுமான தத்துவ உண்மை நம்மனோர் உள்ளத்திலும் நன்கு பதிவதாக.

**திரு. க. நாகேந்திரா**
**1ம் வருடம்,**
**கணிதப்பிரிவு.**

## விநாயகர் விரும்பும் புஷ்பங்கள்

மந்தரைப்பூ, தாமரை, முல்லை, கொன்றை, இருளாச்சி, செருந்தி, செண்பகம், குருந்து, மல்லிகை, நொச்சி, குவளை, காளாத்தி, செவ்வந்தி, வெள்ளெருக்கு, புன்னை போன்றவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகக் கடவுளின் திருவுருவமும் தத்துவமும்

விநாயகர் திருமேனி தெய்வீகத் தன்மை உடையது அவருடைய சரணாகதி அவயங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு தத்துவங்களை உணர்த்தி நிற்கின்றன. அவை வருமாறு)

**01. விநாயகரின் திருப்பாதம்,**

மெய்யடியார்களின் உள்ளத்தில் திருப்பாதம் பொருந்தும் போது பூர்வவினையால் தோன்றும் இன்னல்கள் ஒழிந்து இன்பம் பெருகுவதாகும்.

**02. பானைபோன்று வயிறு,**

விநாயகர் விஸ்வரூபி, அண்டசராசரங்கள் யாவையுமே "மகாகணபதி" என்னும் எம்பெருமானுள் அடக்கம் என்பதை பானை வயிறு குறிக்கின்றது.

**03. தொந்தியில் பாம்பு அணிந்திருப்பது,**

பாம்பு வடிவம் சக்தியைக் குறித்து நிற்கின்றது. விநாயகர் தனது சக்தியினால் அனைத்தையும் தனது தொந்தியினுள் அடக்கி தாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதையே பாம்பு அணிந்த தொந்தி விளக்குகின்றது.

**04. ஐந்து கரங்கள்,**

விநாயகர் மிகவும் ஆற்றல் உடையவர் என்பதையும் ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் புரிபவர் என்பதையும் விளக்கிக் காட்டுவதாக ஐந்து கரங்கள் இருக்கின்றன.

**05. ஒரு கையில் அங்குசம் இருத்தல்,**

யானையை நேரான பாதையில் நடத்திச் செல்வதற்கு அங்குசம் என்னும் ஆயுதம் உபயோகிக்கப்படுகின்றது. அதுபோல் ஆன்மாக்களை நேரான பாதையில், தடைகளை நீக்கி அருள்பாலிப்பதாக அங்குசம் கையில் அமைந்துள்ளது.

**06. ஒரு கையில் பாசம் இருத்தல்,**

யானையை கட்டிப்போடுவதற்கு கயிறு தேவை. கயிறு பாசத்தைக் குறித்து நிற்கின்றது. இறைவனை ஆன்மாக்களுடன் பிணைப்பதற்கும், உயிர்களை நல்ல வழியில் நடத்திச் செல்வதற்கும் கயிறு காணப்படுகின்றது.

**07. ஜெபமாலை**

ஆன்மாக்களில் சிந்தனா சக்தியை வளர்த்து ஞானம் பெற உதவுகிறார் விநாயகர் என்பதைக் குறிக்கும்.

**08. மற்றொரு கரம்,**

இது அபயக்கரம் தன்னை நாடி வருகின்ற உயிர்களுக்கு இந்தக் கரத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கின்றார்.

**09. தும்பிக்கை,**

தும்பிக்கையானது துன்ப உணர்ச்சி, வாசனை அறிதல், உணவை எடுத்தல் ஆகிய மூன்று காரியங்களையும் செய்வதாகும். இது அன்றாடம் வாழ்க்கையிலே காரியங்கள் யாவும் தடையின்றி நடைபெற அருளுவதாகும்.

**10. யானைத்தலை**

விலங்குகளுள் பெரியது யானை, ஆற்றல் மிக்கது, புத்திக்கூர்மை உள்ளது, காலம் வரும்வரை காத்திருந்து காரியமாற்றக் கூடியது. யானையின் சத்தமானது ஓங்கார நாதமாகும். யானைத்தலை "ஓம்" என்னும் பிரணவத்தின் வடிவமாகும். ஆகவே யானைத்தலை பிரணவ மந்திரத்தை உணர்த்தி நிற்கின்றது.

**11. இரண்டு செவிகள்,**

உயிர்களுக்கு கன்ம வேதனை தாக்காமல் காத்து, வினை வெப்பம் போக்கி அருளுவது, அத்தோடு எங்கிருந்து குரல் கொடுத்தாலும் ஏற்கும் தன்மையைக் குறிப்பதாகும்.

**12. மூன்று கண்கள்,**

பெருக்குதல், வளர்த்தல், பண்படுத்துதல் ஆகிய மூன்று தொழில்களையும் இவை உணர்த்தி நிற்கின்றன. விநாயகப் பெருமானின் முக்கண் பார்வை பட்ட மாத்திரத்திலேயே செல்வம் பெருகும். ஞானம் வளரும், இயல்புகள் பண்படும்.

**13. ஒற்றைக்கொம்பு**

இறைவனின் தியாகத்தை ஆன்மாக்களிடையே உணர்த்துவதாக உள்ளது. இது பரம்பொருளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்த தன்மையை விளக்குகிறது.

**14. உடைந்த கொம்பு**

மகாபாரதத்தை வியாசர் என்னும் மாமுனிவர் பாடியருளினார். அம்மாபெருங் காவியத்தை தானே பாடி, தாமாகவே எழுதுவது கடினமான செயல் என்பதால், விநாயகரைத் தொழுது வேண்டி, தமது காவியத்தை எழுதுவதற்கு ஒருவரைத் தெரிவு செய்து தருமாறு வேண்டினார். நல்ல காரியம் நடைபெறும் பொருட்டு தன்து கொம்பை ஒடித்து எழுத்தாணியாக பயன்படுத்தி தாமே அம் மகாபாரதத்தை எழுதியருளினார்.

**15. பிறை**

சந்திரனின் உடல் தோய்ந்த நிலையிலும் நீங்காமல் பிரகாசமாக இருப்பது பிறை. களங்கம் மட்டும்தான் நீங்குகிறது. தவத்தின் விளைவாக உடல் தேய்ந்தாலும் ஞானம் ஒளிவிடும் என்பது இதன் தத்துவம்.

**16. பெருச்சாளி வாகனம்**

எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த கடவுள் ஒவ்வொரு உயிரிலும் இருக்கிறான். எல்லா உயிரினங்களும் ஏதோ ஒருவகையில் இறைவனின் வாகனங்களாகும். சிறியதாக உடல் வடிவம் இருந்த போதிலும் அவற்றின் ஆத்ம சொருபம் அளவிலடங்காதது. பெருச்சாளி வடிவமானது இத்தத்துவத்தை உணர்த்துகின்றது.

**17. இரண்டு மனைவிகள்**

சித்தி, புத்தி என்னும் இரண்டு மனைவிகள் விநாயகருக்கு உள்ளனர். விநாயகரை வழிபடுவோர் நல்ல புத்தியையும், வாழ்க்கையில் நிறைய சித்திகளையும் பெறுவார்கள் என்பதாகும்.

விநாயகரை உள்ளன்புடன் வழிபடுவோர் யாவரும் நிறைந்த செல்வத்துடனும், நீண்ட ஆயுளுடனும், நன் மக்கட்பேறுகளுடனும், நோயற்ற வாழ்வு, நவநிதிப பேறு, மன அமைதி போன்ற எல்லா நலன்களும் நிறைந்து வாழ்வார்கள். யாமும் கணபதியை வழிபட்டு உய்வோமாக.

அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள் தம்மாற்
பகரு மொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்று நருக் கறக் கருணை புரிந்தல் வார்க்கு
நிகரில் மறக் கருணை புரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வோம்.

ஓம் விநாயகா..... ஓம் விநாயகா.... ஓம் விநாயகா

திருமதி. யோகேஸ்வரி
பூபாலகிருஷ்ணன்,
1ம் வருடம்
கணிதப் பிரிவு.

## விநாயகர் விரும்பும் அறுகு

அறுகு விடத்தில் முளைத்து கொடிபோல் நீண்டு பிற இடங்களிலும் விரிந்து பரந்து வேரூன்றிச் செல்வதும் "ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி" என்பது பழமொழி. இதுபோலவே எமது உடலில் குண்டலியில் வசிப்பவராகிய விநாயகப் பெருமான் உடலில் ஏனைய இடங்களில் பொருந்தச் செய்கிறார். இதன் காரணமாக அறுகு அவருக்குப் பிரியமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானின் மூர்த்தங்கள்

ஆன்மாக்களது வாழ்வில் இருள் போக்கி தன்னை நாடி வருவோர்க்கு தத்துவ சொருபமாக அமர்ந்திருந்து அடியார்களின் விக்கினங்கள் தீர்த்து அருள்பாலித்துக் கொண்டிருப்பவர் விநாயகப் பெருமான்.

இவர் ஓங்கார மந்திரமான பிரணவத்தினைக் குறிக்கும் யானைமுகம், பருத்த தொந்தி, தேவ உடல், முக்கண், ஐந்து திருக்கரங்கள், இரண்டு திருவடிகள் என்ற வடிவினராய் அங்குசம், பாசக்கயிறு, மோதகம், முறிந்த கொம்பு, அட்சரமாலை, அமுதகலசம் என்பவற்றைத் தாங்கியவராய் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கின்றார்.

இந்த விநாயகப் பெருமானுக்கு பல்வேறு திருவுருவங்களுண்டு. இவை ஒவ்வொன்றும் பக்தி வழி நின்று வழிபடுவோர்களுக்கு பேரின்பத்தையும், ஈடேற்றத்தினையும் கொடுக்கும் வகையில் திருவிளையாடல்கள் புரிந்த திருவுருவங்கள் ஆகும். இவ்வாறு அடியார்களது உள்ளப் பெருங்கோயிலில் நீக்கமற நிறைந்திருக்கும் பொருட்டு விநாயகப் பெருமானின் முப்பத்திரெண்டு மூர்த்தங்களும் அவற்றின் தத்துவங்களும் வருமாறு;

**பாலகணபதி:-**

இவர் பதும ஆசனத்தில் நான்கு திருக்கரங்களும் யானை முகமும் குழந்தைத் திருமேனியும் உடையவராவார். துதிக்கைதனிலே மோதகமும் நான்கு திருக்கரங்களிலும் மா, பலா, வாழைப் பழங்களும் கரும்பும் கொண்டிருப்பவர்.

**தருணகணபதி:-**

இவர் எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தினையும் கொண்டிருப்பவர். தனது திருக்கரங்களிலே பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவல்பழம், ஒடிந்த தன் கொம்பு, நெற்கதிர், கரும்பு முதலானவற்றைத் தாங்கியவரும் சிவந்த திருமேனியினை உடையவரும் ஆவார்.

**பக்திகணபதி:-**

வெண்ணிறத் திருமேனியும் தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயாசப் பாத்திரம் என்பனவற்றைக் கரங்களில் தாங்கியும் அமர்ந்திருப்பவர் இவர்.

**வீரகணபதி:-**

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி முதலிய பதினாறு ஆயுதங்களைத் தாங்கிய சிவந்த திருமேனி உடையவராக விளங்குவர்.

**சக்தி கணபதி:-**

சிவந்த திருமேனி உடையவரும், பச்சை வர்ண மேனியினைக் கொண்ட தேவியைத் தழுவிக் கொண்டிருப்பவரும் பாசம் பூமாலை ஆகியனவற்றைக் கரங்களில் தாங்கியவரும் அபயக்கரம் உடையவருமாகத் திகழ்பவர்.

**துவஜகணபதி:-**

நான்கு கரங்களிலும் ஏடு, அட்சரமாலை, தண்டம் முதலானவற்றைத் தாங்கியவரும் கைவளையங்களை அணிந்தவரும் சந்திரனைப் போன்ற வெண்மையான நான்கு யானை முகங்களையும் கொண்டிருப்பவர்.

**சித்திகணபதி:-**

மாம்பழம், பூங்கொத்து, கரும்பு, எள்ளுருண்டை, பரசு ஆகியவற்றைத் தனது ஐந்து கரங்களில் தாங்கியவரும் பதும ஆசனத்தில் அமர்ந்திருப்பவரும் பொன் கலந்த பசுமை நிறையுடையவராகவும் விளங்குபவர்.

**உச்சிஷ்ட கணபதி:-**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சரமாலை, இவற்றைத் தரித்தவரும் நீலவர்ணத் திருமேனியினை உடையவராகவும் விளங்குபவர்.

**விக்னகணபதி:-**

பொன் மேனியினை உடையவராகவும் சங்கு, கரும்புவில், புஸ்பபரணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து என்பவற்றை கரங்களில் கொண்டிருப்பவராக விளங்குபவர்.

**சிப்ர கணபதி-**

தந்தம், கற்பகக் கொடி, பாசம், இரத்தின கும்பம், அங்குசம் ஆகியவற்றைத் தாங்கி, செவ்வரத்தம் பூப் போன்ற அழகிய மேனியுடைய யானை முகத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏரம்ப கணபதி:-**

அபயக் கரத்தினை உடையவரும், பாசம், தந்தம், அட்சரமாலை, சம்மட்டி, மாலை, பரசு, மோதகம், பழம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவரும், சிங்க வாகனத்தில் அமர்ந்திருப்பவரும் ஆகிய இவர் கருமை நிறம் ஐந்து திருமுகங்களைக் கொண்டுள்ளவர் ஆவார்.

**இலட்சுமி கணபதி:-**

எட்டுக் கைகளிலும், கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்சம், வரதம் இவற்றைத் தாங்கி வெண்மை நிறத்தோடு கூடிய மேனியுடன் நீலநிறத் தாமரைப் பூத்தாங்கிய இரு பெருந் தேவிமார்களோடு வீற்றிருப்பவராவர்.

**மகா கணபதி:-**

திருக்கரங்களில் மாதுளம்பழம், கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், இரத்தின கலசம் இவற்றினைத் தாங்கிய செங்கதிர் போன்ற முக்கண்ணர் பிறை முடியர், மடிமீது எழுந்தருளிய தாமரை தாங்கிய தேவியோடு வீற்றிருப்பவர்.

**விஜய கணபதி:-**

பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்திருக்கும் இவர் செந்நிற மேனியராயும், பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் முதலானவற்றைத் தாங்கியவராயும் விளங்குபவர்.

**நிருத்த கணபதி:-**

இவர் நர்த்தன விநாயகர், கூத்தாடும் பிள்ளையார் எனவும் அழைக்கப்படுவர். மோதிரம் அணிந்த கைகளில் பவளம் அங்குசம், அபூபம் கோடரி. தந்தம் இவைகளைத் தாங்கியவர். பொன் போன்ற திருமேனியரான நிருத்த கணபதி கற்பக விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிருப்பவராவார்.

**ஊர்த்துவ கணபதி:-**

பச்சை வர்ணத் தேவியைத் தாங்கியிருப்பவராகிய இவர் நீலப்பூ, நெறிபயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றை உடையவராக விளங்குபவர்.

**ஏகாட்சர கணபதி:-**

பெருச்சாளி வாகனராகிய இவர் மாதுளம்பழம், பாசம், அங்குசம், வாதம் ஆகியவற்றைத் தாங்கிய செம்பட்டாடையும் செம்மலர் மாலையும் அணிந்த குறுங்கையரும் பிறை சூடிய முக்கண்ணரும் ஆவார்.

**வரகணபதி:-**

செந்நிறமும், யானை முகமும் பிறை சூடியவருமான இவர் பாச, அங்குசங்களைத் தரித்திருப்பவராவார்.

**திரையாட்சர கணபதி:-**

நான்கு திருக்கரங்களிலும் பாசம். அங்குசம், மாம்பழம், தந்தம் ஆகியவற்றைத் தரித்தவரும் துதிக்கையில் மோதகமும் அசைகின்ற செவிகளில் சாமரை அணிந்தவரும் ஆன இவர் பொன்நிறமுடைய திருமேனியர்.

**சிப்ரப்பிரசாத கணபதி:-**

பாசம், அங்குசம், கல்பலகை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விஷ்டரம் முதலான வற்றைக் கொண்டிருப்பவரும் ஆபரணங்களை அணிந்த பேழை வயிற்றை உடையவரும் ஆவார்.

**ஹரித்திரா கணபதி:-**

தனது நான்கு திருக்கரங்களிலும் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தாங்கிய மஞ்சள் நிறத்தவர்.

**ஏகதந்த கணபதி:-**

நீலநிற மேனியினையும் பேழை வயிறினையும் கொண்ட இவர் கோடரி, அட்சரமாலை, லட்டு, தங்கம் முதலியவற்றைக் கரங்களில் தாங்கியவர்.

**சிருஷ்டி கணபதி:-**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் என்பனவற்றைக் கரங்களில் தாங்கி பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்திருக்கும் சிவந்தமேனியர்.

**உத்தண்ட கணபதி:-**

பத்துத் திருக்கரங்களை உடையவரும் அவற்றில் நீலம். தாமரை, மாதுளை, கதை, தஞ்சம், கரும்பு வில், ரத்தினகலசம், பாசம், நெற்கதிர், மாலை என்பனவற்றைத் தாங்கிய வருமாகிய இவர் அழகிய தாமரைப் பூவினைத் தாங்கிய பச்சை நிற மேனியை தேவியினைத் தழுவப் பெற்றவர்.

**ரணமோசன கணபதி:-**

வெண்பளிங்கு போன்ற மேனியினை உடைய இவர் செம்பட்டாடை உடுத்தி பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் ஆகியவற்றைத் தாங்கியவராவர்.

**துண்டி கணபதி:-**

அட்சமாலை, கோடரி, இரத்தினகலசம் இவற்றினைத் தாங்கியவர்.

**துவிமுககணபதி:-**

பசுநீல மேனியுடைய இவர் இரு திருமுகங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் நான்கு திருக்கரங்களையும் கொண்டிருப்ப தோடு செம்பட்டாடையும், இரத்தின கிரீடமும் அணிந்து தந்தம், பாசம், அங்குசம், இரத்தன பாத்திரம் இவற் றைத் தாங்கி அமர்ந்திருப்பவர்.

**மும்முக கணபதி:-**

பொற்றாமரை ஆசனத்தில் மூன்று திருமுகங் களோடு எழுந்ருளியிருக்கும் இவர் வலது கைகளில் கூரிய அங்குசம், விரம், அட்சமாலை என்பவற்றையும் இடது கைகளில் பாசம், அமுத கலசம் அபயம் என்பவற்றையும் பெற்றவர்.

**சிங்க கணபதி:-**

சிங்க வாகனத்தில் எழுந்தருளிய வெண்ணிய ஒரு மேனியுடையவரான இவர் வீணை, கற்பகக் கொடி, வரதம் என்பனவற்றை வலது திருக்கரங்களிலும் தாமரை, இரத்தின கலசம், பூங்கொத்து அபயம் ஆகிய வற்றை இடது திருக்கரங்களிலும் கொண்டிருப்ப வராவார்.

**யோக கணபதி:-**

யோக நிலையில் யோகப்பட்டம் தரித்துக் கொண்டு இளஞ் சூரியன் போன்ற நிறத்துடன் நீல நிற ஆடை உடுத்தி பாசம் அட்சமாலை யோக தாண்டம், கரும்பு ஆகியவற்றை ஏந்தி இருப்பவர்.

**துர்க்கா கணபதி:-**

பசும் பொன் நிறமுடைய எட்டுக் கரங்களிலும் கொண்ட பெரிய மேனியுடன் அங்குசம், பாணம், வில், அட்சமாலை, தங்கம், கொடி, நாவற்பழம் ஆகியவற் றைக் கரங்களில் தாங்கியவர்.

**வல்லபை கணபதி:-**

எட்டுத் திருக்கரங்களிலும் சக்கரம், சூலம், வேல், அங்குசம், தாமரை, கதை, பாசக் கயிறு, சாமரம் என்பவற்றைத் தாங்கியவரும் வல்லபையின் திருமடியில் அமர்ந்திருப்பவரும் ஆவார்.

இவ்வாறாக தன்னைத் தொழுது நிற்கும் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் பல திருவுருக்களைத் தாங்கியவராய் எங்கணும் வியாபித் திருக்கும் தொப்பை அப்பனைத் தொழ, துள்ளியோடும் எமது வினைகளே.

**தங்கராசா - மதிவண்ணன்**

**2ம் வருடம்**
**ஆரம்பக் கல்வி**













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக வழிபாட்டின் மகிமை

உலகுயிர்களின் உயிர் நாதமாக - உலகத்தின் ஒரே கீதமாக ஒலித்துக் கொண்டிருக்கும் ஓங்கார நாதத்தின் நாயகராக விளங்குபவர் விநாயகப் பெருமான். முழுமுதற் கடவுளான சிவனுக்குப் பிள்ளையாக இருந்தாலும் சிவனுக்கு ஒப்பாக அருள் பாலிப்பவர் இப்பெருமான்.

பார்வதி பரமேசுவரனின் பிள்ளையாக இருப்பதால் பிள்ளையார் என எல்லோராலும் வழிபடப்படுகிறார். பிள்ளைகளின் தெய்வமாகவே கருதப்படுகிறார். இவருக்கு உடைக்கப்படும் சிதறு தேங்காய் அடியார் வினைகளைச் சிதறி ஓட வைப்பதாகக் கருதப்படுகின்றது. உடைக்கப்படும் தேங்காய்த் துண்டுகள் பிள்ளைகளுக்கு உடமையாகி விடுகின்றன. நல்லுணவு செய்து பிள்ளைகளுக்கு வழங்குதல் இவருக்குப் பிடித்தமான ஒரு வழிபாடாகக் கருதப்படுகின்றது.

விநாயகர் வழிபாடு உலகளாவிய ரீதியில் எங்கும் காணப்படுகிறது. வழிபாட்டிற்கு மிகவ எளிதாக இருப்பது பிள்ளையார் வடிவம். மண்ணாலோ அல்லது மஞ்சள் மாவாலோ அல்லது சாணத்தாலோ அறுகம் புல்லாலோ பிள்ளையாரை உருவமைத்து வழிபடலாம். எவ்விடத்திலும் விநாயக வழிபாட்டைச் செய்யமுடியும். இயற்கையாக அமைந்த கற்களைக் கூடப் பிள்ளையாராக வைத்து வழிபடல் எமது பண்டைய மரபு. இவ்வகையில் சிற்பியால் செதுக்கப்படாத பிள்ளையார் பாரத புண்ணிய பூமியில் திருநாரையூர்த் தலத்தில் (பொள்ளாப்பிள்ளையார்) காணப்படுகிறார். இங்குள்ள பிள்ளையார் வடிவம் இயற்கையாகவே அமைந்தது. சிற்பியால் பொள்ளாத படியால் பொள்ளாப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றார். நம்பியாண்டார் நம்பி வணங்கி அருள் பெற்ற பிள்ளையார் இப் பொள்ளாப் பிள்ளையாரேயாவார். இதேபோன்ற இயற்கையாக அமைந்த பிள்ளையார் வடிவம் கதிர்காமம் முத்துலிங்க சுவாமி கோயிலிலும் காணப்படுகிறது. எவரும் எளிதில் வழிபட்டுப் பலன் பெறக் கூடியதாக விநாயகர் வழிபாடு அமைந்துள்ளது. எமது வசதிக்கேற்ப எங்கும் விநாயகப் பெருமானை எழுந்தருளப் பண்ணமுடிகிறது. அத்தோடு சைவ மரபின் எந்த நிகழ்விலும் விநாயகருக்கே முதல் வணக்கம் செலுத்தப்படுவது இப் பெருமானின் சிறப்பம்சமேதான்.

பிள்ளையாரை வணங்கி மேற்கொள்ளும் காரியங்கள் வெற்றியுடன் முடிவது வழக்கம். விநாயகரை வணங்க மறந்த தெய்வங்கள் கூடச் சங்கடப்பட்டு மீண்டும் வணங்கி நலம் பெற்றதைப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்னவதனம் தியாயே
சர்வ விக்னோப சாந்தயே

என்பது பிள்ளையாருக்குரிய அர்ச்சனைச் சுலோகமாகும். மற்றும் விநாயக காயத்திரி சுலோகம் பிள்ளையாரின் அர்ச்சனைச் சுலோகமாகக் கொள ாப் படுகிறது.

"ஏக தந்தாய வித்மஹி
வக்ர துண்டாய தீமஹி
தன்னோ புத்திப் பிரஷோதயாத்"

பிள்ளையாரின் அர்ச்சனை மந்திரங்களில் இவையும் இடம் பெறுகின்றன.

"வக்ரதுண்ட மகாகாய
சூர்ய கொடி சமப்பிரபா
நிர்விக்னம் குருமேதேவ
சர்வகார்யேக சர்வதா".

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் - மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிகையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு."

இவரது வழிபாட்டில் அறுகம்புல் முதலிடம் வகிக்கிறது. தினமும் அறுகம்புல் அர்ச்சனை செய்பவர்கள் துன்பம் நீங்கப் பெறுவார்கள் என்பது ஐதீகம். மேலும் அருச்சனையில் வன்னிப் பத்திரங்கள், மந்தாரப்பூ என்பனவும் இடம் பெற்று வருவதைக் காணலாம்.

இவர் விரும்பி ஏற்கும் நைவேத்தியம் மோதகமாகும். மோதகம் என்பது மகிழ்ச்சியைக் குறிப்பது. மோதகப் பிரியர் என்பது இவருக்கு வழங்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமங்களில் ஒன்றாகும். மற்றும் அவருக்கு உகந்த நிவேதனப் பொருள்களாக தேங்காய், வெல்லம், எள்ளு ருண்டை. அப்பம், அவல், பொரி, மா, பலா, வாழை, பருப்புவகை, கிழங்குவகை என்பனவும் அமைகின்றன.

விநாயகர் வழிபாட்டில் தலையில் குட்டுவதும் தோப்புக்கரணம் போடுவதும் சிறப்பான வழிபாடுகளாக இருந்து வருகின்றன. தலையில் குட்டிக் கொள்ளுவ தற்கும், தோப்புக்கரணம் போடுவதற்கும் புராண வரலா றுகள் சான்று பகர்கின்றன.

ஒருமுறை திருமாலின் சக்கரத்தை பிள்ளையார் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். அதனை விஷ்ணுவால் பறிக்க முடியாமல் போய்விட்டது. அவரைச் சிரிக்க வைத்தால் சக்கரம் விழுந்து விடும் என நினைத்த திருமால் நான்கு கைகளாலும் செவிகளைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போட, பிள்ளை யார் சிரித்தார். சக்கரம் விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டு ஓடிவிட்டாராம். கர்ணம் என்பது காது. தொப்பி என்பது கைகளினால் காதுகளைப் பிடித்தல் என்பது இதன் பொருளாகும். இது பிள்ளையாருக்கு விருப்பமான ஒரு வழிபாட்டு முறையாகும்.

காவிரியை ஓட வைக்க அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்க்க காக வடிவில் வந்த பிள்ளையார் அகத்தியர் துரத்தும் போது சிறுவனாக மாறினார். அப்போது பிள்ளையாரின் தலையில் குட்டினாராம். பிள்ளையார் தமது உருவைக் காண்பித்ததும் தானே தனது தலை யில் குட்டி வணங்கினாராம். இதே வணக்கம் இன்றும் பிள்ளையாருக்குகந்த ஒரு வழிபா டாக இருந்து வருகிறது.

**S. உமையேஸ்வரி**
**1ம் வருடம்**
**விஞ்ஞானப் பிரிவு**



சித்திபுத்தி விநாயகர்

## விநாயகர் நாமங்கள்

| | |
|---|---|
| கணேசர் | சதுர்ப்புஜர் |
| விக்நராஜர் | பரசுஹஸ்தர் |
| ஆகுவாகனர் | கஜவக்த்ரர் |
| ஏரம்பர் | விக்நஹந்த்ரர் |
| தேவதேவர் | சூர்ப்பகர்ணர் |
| லம்போதரர் | ஏகதந்தர் |
| ஸ்தூலகண்டர் | குமாரகுருவர் |
| ஸ்கந்தாக்ரஜர் | சர்வேஸ்வரர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயக வழிபாட்டின் தொன்மை

அறிவே உருவாகிய கடவுள் என்றும் உள்ளவர். இருந்தும் உருமேனி தாங்கிய நிலையில் இறைவன் ஒரு காலத்தை ஒட்டியே வழிபாட்டிற்கு வந்திருக்க வேண்டும். அதை அறிந்து கொள்ளும் வண்ணம் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இறைவன் கொள்ளும் திருமேனி அவர் திருவுள்ளக் குறிப்பால் அவர் விரும்பிய வண்ணம் எய்தப் பெறுவதாகும். ஆகவே எந்தக் காலத்தில் நினைவு கொண்டார்? எவ்வடிவம் கொண்டார்? என்பது சொல்ல முடியாது. ஆனாலும் சாஸ்திர தோத்திரங்கள் இதிகாச புராணங்கள் இலக்கியங்கள் என்பவற்றில் கடவுளர் கொண்ட திருவுருவப் பெயர்கள் எவ்வாறு கூறப்பெற்றுள்ளன என்பதைக் கொண்டு அதன் தொன்மை நிலையை ஒருவாறு அறியமுடிகின்றது.

உலகத் தோற்றுவாயையிட்டு நினைவு கூரும் போது முதன் முதலில் தோன்றிய ஒலி "ஓம்" என்பது. இது விநாயகரைக் குறிப்பதாகும். ஆகவே மனிதன் உலகில் எப்போது தோன்றினானோ அப்பொழுதே விநாயக வழிபாடும் தோன்றியிருக்கலாம் என நினைப்பதற்கு இடமுண்டு.

கி.மு 1500 தொடக்கம் கி.மு. 900 க்கு இடைப்பட்ட இருக்கு வேத காலத்தில் கண, கணபதி என்னும் சொல்லாட்சி காணப்படுகிறது. கணபதி என்னும் பொழுது கணங்களுக்கெல்லாம் அதிபதி. வேதகாலத்தில் கணங்களுக்கெல்லாம் தலைவனாக இந்திரன் இருந்தமை குறிப்பிடப்படுகின்றது. ஆனாலும் இந்திரன் கணபதி என்ற பெயரால் அழைக்கப்படவில்லை. ஆகவே கணபதி என்பது விநாயகரையே குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

யசுர் வேதத்திலும் விநாயகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் **சால கடங்கர், கூஷ்மாண்ட ராஜபுத்திரர், உஸ்மிதல், தேவையயனார்** ஆகிய நான்கு வகையான விநாயகர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியக் கிடக்கின்றது.

சமய ஆராய்ச்சியில் ஈடுபட்ட செல்வி 'கற்றி' என்பவர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை கல்வியறிவு குறைந்தவர்களாக கருதப்படுகின்ற ருத்திரர்கள் கணபதியைத் தெய்வமாகக் கொண்டிருந்தனர் என எடுத்துக் கூறியுள்ளார்.

வியாசர் மகாபாரதம் இயற்றிய காலத்தில் விநாயகர் எழுதினார் என்பது வரலாறு. விநாயகர் எழுதிய மகாபாரதம் 8800 சுலோகங்களைக் கொண்டுள்ளது. வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார். ஆகவே பாரத காலத்தில் விநாயகர் வழிபாடு இருந்தமை தெட்டத் தெளிவாகின்றது. இந்த வியாசரின் வழிபடு தெய்வமாக விநாயகர் காணப்படுகின்றார். கல்லாடத்தில் கணபதி வழிபாட்டுச் செய்யுள் காணப்படுகின்றது. ஆகவே 5ம் நூற்றாண்டுக்கு முதலும் கணபதி வழிபாடு இருந்தமை புலனாகின்றது.

மணிமேகலையில் கரகங்கவிழ்த்த "காவிரிப் பாவை" என்று குறிப்பிடப்படுகின்றது. இதிலடங்கியுள்ள வரலாறு விநாயகர் காக வடிவம் கொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்ததாக கூறுகின்றது. இதனாலும் விநாயகர் சங்க இலக்கியத்திலும் இடம் பெறுகின்றார் என்பது தெளிவு.

சம்பந்தர் பாடலிலும் கணபதி பற்றிப் பேசப்பட்டுள்ளது. பிரமபுரப் பதிகமாகிய "பொங்கு வெண்புரி வலிவலப்பதிகமாகிய "பிடியதனுருவுமை" போன்ற தேவாரங்களிலும் விநாயகரைப் பற்றி விசாலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பர் பாடிய திருவீழிமிழலைப் பதிகமாகிய "கைவேழமுகத்தானை" திருவதிகை வீரட்டானப் பதிகமாகிய "பல பல காமத்தராகி என்னும் பாடல்களிலும் விநாயகரைப் பற்றி விசாலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்புற்றிருந்தது. கி.பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பக்தி இலக்கிய காலமெனப் போற்றப்படும் பல்லவர் ஆட்சிக் காலத்திலேதான் விநாயகர் வழிபாடு முதலாம் நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்று வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்றைத் தமிழகத்திற்குக் கொணர்ந்தான். இச் சிற்பம் தற்போது திருச்செங்காட்டான் குடியில் உள்ளது என்று கூறப்படுகின்றது. சாளுக்கிய நாட்டில் 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல விநாயகர் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் விநாயகரை சப்த கன்னியருடன் காணலாம். இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாச நாதர் கோயிலில் இத்தகைய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளதை நோக்கும் போது சாளுக்கிய நாட்டில் இருந்து தமிழகத்திற்கு கணபதி வழிபாடு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பிய காலம் என்றழைக்கப்படும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 12ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட சோழர் காலத்தில் மூத்த நாயனார் திரு விரட்டை மணிமாலை மூத்தபிள்ளையார் மும்மணிக் கோவை, திருநாரையூர் விநாயகர் இரட்டை மணி மாலை, போன்றவை விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு எழுதப்பட்டமையை நோக்கும் போது இக்காலத்தில் விநாயகர் வழிபாடு மிகச் சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகின்றது. இதற்குப்பிற்பட்ட காலத்தில் எழுந்த பல சிற்றிலக்கியங்களும் அறிய ஆதாரங்களாக விளங்குகின்றன.

ஆகவே விநாயக வழிபாடானது கல்வெட்டுக்களை இலக்கியங்களை கருவியாகக் கொண்டு அளக்க முடியாத அளவிற்கு தொன்மை வாய்ந்தது. பிரணவம் அனாதியானது அதனை அறிவிக்கும் திருவுருவம் மிகமிகத் தொன்மையானவை என்பது கண்கூடு.

**செல்வி. ராதிகா பகவத்சிங்கம்**
**1ம் வருடம்**
**விஞ்ஞானப்பிரிவு**




**01.** பாசம்
**02.** அங்குசம்
**03.** தந்தம்
**04.** வேதாளம்
**05.** சக்தி
**06.** அம்பு
**07.** வில்
**08.** சக்கரம்
**09.** கத்தி
**10.** கேடகம்
**11.** சம்மட்டி
**12.** கதை
**13.** நாகபாசம்
**14.** சூலம்
**15.** குந்தாலி
**16.** மழு
**17.** கொடி
**18.** தண்டம்
**19.** கமண்டலம்
**20.** பரசு
**21.** கரும்பு வில்
**22.** சங்கம்
**23.** புஷ்பபாணம்
**24.** கோடரி
**25.** அஷ்மாலை
**26.** சாமரம்
**27.** கட்டுவாங்கம்
**28.** தீ அகல்
**29.** வீணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக விரதங்கள்

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள். அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்தி உணவை விடுத்து அல்லது சுருக்கி இறைவனை மனமுருகி, மெய்யுருகி வழிபடுதல் ஆகும். இந்து சமயத்திலுள்ள விரதங்கள் யாவும் எளிய முறையில் கடைப்பிடித்து, மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மையை நோக்கி இட்டுச் செல்வன. ஒவ்வொரு மாதமும் ஏதாவது விரதம் அல்லது விழாநாள் என்று சொல்லக் கூடியளவு, புனிதம் பெற்றுள்ளதை காணும்பொழுது இந்து சமயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மிகவும் புண்ணியவான்கள், பேறுடையவர்கள் என்று கூறினால் மிகையாது.

எங்கும் இருந்து, அண்ட சராசரங்கள் அனைத்திலும் உள்ள உயிர்களின் மனதில் இடம் பிடித்துள்ள விநாயகருக்குரிய சிறப்பு விரதங்களாக நாம் மூன்றைக் குறிப்பிடலாம். அவை விநாயக சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக கஷ்டி விரதம் என்பனவாம்.

**விநாயக சுக்கிரவார விரதம்**

விநாயக சுக்கிர வார விரதத்தை அனுட்டிக்க விரும்புவோர் வைகாசி மாதம் வளர்பிறை முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாமல் விநாயகரை எண்ணி விரதம் இருந்து வழிப்பட வேண்டும். இவ்விரதம் இருப்போர் பகல் பொழுது உணவை விடுத்து இரவு கனிவர்க்கம் புசித்து அடுத்தநாள் காலையில் அந்தணருக்கு தானம் கொடுத்து அடியாருடன் பாரணம் செய்தல் வேண்டும். இயலாதவர்கள் பகல் பொழுது ஒரு நேர உணவு உண்டு விரத அனுட்டானத்தை மேற்கொள்ளலாம். இவ்விரதத்தை முறைப்படி கடைப்பிடித்து ஒழுகு வதன் மூலம் நல்ல குழந்தைகளை பெற்றெடுப் பதோடு, செல்வ சிறப்புமிக்க வாழ்வும், செய் தொழில் திறமையும் ஏற்படும். இந்நோன்பை நோற்றதன் மூலம் அத்திரி மகரிஷி சந்திரனையும், துர்வாசரையும் பிள்ளைகளாகப் பெற்றார். குபேரன் சங்கநிதி, பதுமநிதிகளைப் பெற்றார். பிரம்ப தேவனோ சிருஷ்டித் தொழில் சிறப்புப் பெற்றான்.

**விநாயக சதுர்த்தி விரதம்**

விநாயக சதுர்த்தி விரதம் ஆவணிச் சதுர்த்தி விரதம் எனவும் பெயர் பெறும். விநாயக விரதங்களுள் மிகச் சிறந்த விரதமாகக் கருதப்படும். இவ்விரதம் ஆவணிமாத பூர்வ பக்கச் சதுர்த்தித் திதியில் அனுட்டிக்கப்படும். வளர்பிறை காலத்து நாலாம் நாள் சதுர்த்தித் திதி நண்பகலில் பொருந்தி நிற்கும் தினமே இவ்விரதம் நோற்பதற்குரிய நாளாகும். விநாயகர் ஆலயங்களில் இவ் விரத நாளிலே விசேட அபிடேகம், பூசை வழிபாடுகள் என்பன நிகழ்கின்றன. இவ்விரதத்தினைப் பூசை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்ளலாம்.

விநாயக சதுர்த்தி விரத தினமானது, பிரமன் அருளினால் பெருவலிமை பெற்ற சிந்தூரன் என்னும் கஜாமுகாசுரனை சங்கரிப்பதற்காக விநாயக கஜானனாகத் திருவவதாரஞ் செய்தருளிய தினமே ஆகும். சிந்தூரன் என்னும் அரக்கன் இழைத்த கொடுமைகளுக்கு ஆற்றாது தேவர்கள் இறைவனிடம் முறையிட அவனை அழித்து அமரரைக் காக்குமாறு விநாயகரிடம் இறைவன் பணித்தார். இவ்வண்ணமே அருளிய இறைவனை தேவர் கள் மகிழ்ச்சி மேலீட்டினால் பூசை செய்துப் போற் றினர். அப்பூசைக்கு வந்த விநாயகர் மகிழ்ச் சியோடு நர்த்தனஞ் செய்து நிற்க அவ் நடனத் தோற்றத்தைக் கண்டு தேவர்கள் போற்றி நின்றனர். சந்திரனோ பரிகசித்து நின்றான். இதனால் சினமுற்ற விநாயகர் இத்தினத்தில் உம்மைக் காண் பவர்கள் பாவிகளாகக் கடவர் என்று சபித்தார். இதனைக் கேட்டு அச்சம் கொண்ட சந்திரன் வெளிப்பட்டுத் தோன்றாமல் இருந்தான். இச் செய்கையினால் உயிரினங்கள் இரவில் ஒளியி ழந்து வருந்தின. இத்துன்ப நிலையைக் கண்ட தேவர்கள் விநாயகரிடம் சென்று, சாபத்தினால் சந்திரன் கரைந்து உறைவதையும், அதனால் மக்கள் உறும் துன்பத்தையும் எடுத்துச் சொல்லி, சந்திர சாபத்தைத் தணிக்குமாறு விநாயகரை வேண்டித் துதித்தனர். அப்பெருமானும் மனம் கசிந்து இச்சம்பவம் நடைபெற்ற ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியில் மட்டும் சந்திரனைப் பார்ப்போர் பாவிகள் ஆவர் என்று சாபத்தைத் தணித்தருளினார். இதனாலே தான் அத்தினத்தில் சந்திரனைப் பார்க்க கூடாது என்பது நியதியாய் உள்ளது.

சதுர்த்தி விரதத்தை அனுட்டிக்க விரும்புவோர் அதிகாலையில் துயில் எழுந்து, நித்திய கர்மானுஷ்டாங்களை முடித்துக் கொண்டு ஆலயம் சென்று வழிபாடு இயற்றி, பகல் முழுக்க உபவாசம் இருந்து, சந்திரன் மறைந்தபின் வீடு சென்று இரவில் கொழுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டை, மோதகம் முதலியவற்றை விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். விநாயக சதுர்த்தியின் இன்னொரு முக்கிய அம்சம் இருபத்தியொரு பத்திரம், இருபத்தியொரு புஸ்பம், இருபத்தியொரு அறுகம்புல் என்பவற்றைக் கொண்டு தனித்தனியாக அர்ச்சித்தல் ஆகும். இவ்விரதமிருக்க விரும்புவோர் ஆவணிச் சதுர்த்தியில் ஆரம்பித்து முறைப்படி இருபத்தொரு வருடம் விரதமிருப்பது நன்று. இயலாதெனின் ஏழு வருடங்கள் அனுட்டிக்கலாம். அதுவும் இயலாதெனின் இருபத்தொன்றுக்கு குறையாமல் மாதச் சதுர்த்தி விரதம் இருந்து அதையடுத்து வரும் ஆவணிச் சதுர்த்தியில் நிறைவு செய்யலாம்.

கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள இவ்விரதம் சூதமுனிவரால் பஞ்ச பாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமை உடையது. இவ்விரதத்தை அனுட்டித்து தமயந்தி மீண்டும் நளனை அடைந்தாள். கிருஷ்ணர், ஜாம்பவர்த்தியையும், சியமந்தக மணியையும் பெற்றார். இராமன் சீதையை மீட்டார். பகீரதன் கங்கையை பூமிக்கு கொண்டு வந்தார். தருமர் முதலானோர் ஆதமுனிவர் உபதேசத்தால் இவ்விரதத்தை அனுட்டித்து துன்பங்கள் நிங்கப் பெற்றனர். இவ்விரதத்தின் மகிமை சொல்லற்பாலன்று. இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்போர் துன்பம், நோய், வறுமை முதலியன நீங்கி இட்ட சித்திகள் யாவும் பெற்று மகிழ்வர் என்பது வெள்ளிடைமலை.

**விநாயக சஷ்டி விரதம்**

விநாயக சஷ்டி விரதம் பிள்ளையார் பெருங்கதை விரதம் என்று அழைக்கப்படும். இது கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையிலான இருபத் தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும். விரத ஆரம்ப நாளில் இருபத்தோரிழையிலான விரதக் காப்பினை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வது வழக்கம். இக்காப் பினை விரதம் முடித்த மறுநாள் பாரணையிலன்று காலை கோயில்களில் வைத்து அவிழ்ப்பர். முதல் விரதம் இருப்போர் இருபது நாளும் ஒரு பொழுது உண்டு. சஷ்டியிலன்று உபவாசம் இருந்து விநாயகருக்கு விசேட வழிபாடுகள் செய்து இரவு பால், பழம் அல்லது பலகாரம் உட்கொள்ளலாம். மறுநாள் காலையில் பாரணம் செய்தல் வேண்டும். இருபத்தொரு வருடம் இவ்விரதம் அனுட்டித்து உத்தியாபனம் செய்யலாம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது கைக்கொள்ளலாம். விரத உத்தியாபனம் என்பது குறிப்பிட்ட கால எல்லை முடிந்ததும் தாம் கைக்கொள்வதாக கருதிய வருடம் நிறைவு பெற்றதும் முறைப்படி விரதத்தை முடித்து விரதப் பலனை தருமாறு வேண்டுதல் செய்தல் ஆகும்.

விநாயக சஷ்டி விரதக் காலங்களில் எமது நாட்டிலுள்ள அநேகமான கோயில்களில் பிள்ளையார் கதை என்னும் நூல் படிக்கப்படுவது வழக்கமாய் உள்ளது. இறுதி நாளாகிய சஷ்டித் திதியிலன்று பிள்ளையார் கதையில் கூறிய வரலாற்றை விரிவாகச் சொல்லும் பிள்ளையார் பெருங்கதை எனப்படும் பிள்ளையார் புராணம் படிக்கப்படும். இதனாலேயே இவ் விரதத்தை பிள்ளையார் பெருங்கதை விரதம் என்றும் கூறுகிறார்கள்.

விநாயக சஷ்டி விரதத்தின் வரலாறு கந்தபுராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது. மாதங்கமாபுரம் என்னும் இடத்தில் இருந்து அரசாண்ட கயமுகாசுரன் என்னும் அசுர அரசன் இறைவனிடம் பெற்ற அளப்பரிய வரங்களினால் தருக்குற்றவனாகித் தேவர்களுக்கு பேரின்னல் விளைவித்தான். துன்பம் மாற்றாத தேவர்களின் துயரங்களை சிவபெருமானின் ஏவலின் பெயரில் விநாயகப் பெருமான் போக்கியருளினார். இதனால் தேவர்கள் தம்மை இரட்சித்த விநாயகருக்கு விரதமிருந்து பூசை இயற்றி வழிபட்டனர். இவ்விரதத்தை மேற்கொண்டு உயர்ச்சி பெற்றோர் பஞ்ச பாண்டவர் எனது விநாயக புராணம் சிறப்பித்து கூறுகின்றது. இன்னும் அம்பிகையின் சாபத்திற்கு ஆளாகி கண்ணி மூந்து பாம்பாக மாறிய திருமால் விநாயக விரதத்தை அனுட்டித்து துன்பம் நீங்கி சுயவடிவம் பெற்றதாக வரலாறு கூறும். விக்கரமாதித்தன் மனைவியாகிய இலக்கணசுந்தரி என்பாள் இவ்விரத்தினை அனுட்டிப்பதாக உறுதிபூண்டு சிலநாள் நோற்றப்பின் அவ்வுறுதியை மறந்த காரணத்தினால் பல இன் னல்களையடைந்து பின் ஔவையாரின் அறிவுரையின்படி முறையாக அனுட்டித்து அருள்பெற்றார் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

